173

173
1.19

NEETHIPURA NYAYAM.

நீதிபுர நியாயம்.

ஓர் இனிய தமிழ் நாவல்

OFFICE OF THE REGISTRAR OF [illegible]
7 - JAN 1919
MADRAS.

1829

BY

K. S. Venkataraman.

Hakkeem Press Bodinayakanur.

6.) (Copy Right.

1918.

O-3MVI2, M
N18
147229

உ

முருகன் துணை.

173
1·19

நீதிபுர நியாயம்.

REGISTRAR ... MADRAS
7 - JAN 1919

K. S. வெங்கிட்டராமன்.

Hakkeem Press, Bodinayakanur.

1918.

Copy Right] [Price As. 4.

147779

300 008

உ

முருகன் துணை.

நீதிபுர நியாயம்.

1-வது அத்தியாயம்.

சித்திரரேகை:— ஆ! ஈசன், ஏன் இச்சாதியைச் சிருஷ்டித்தாரோ சிருஷ்டித்து இப்பூமான்களை நம்புமிம்மதி ஏன்கொடுத்தாரோ பேதையாம் இப்பெண்கள் இப்பூமான்களின் இனிய மொழிகளைச் செவியுண்டு ‘மத்துண்ட பிரமரங்களைப்போல்’ இம்மானவர்களின் வலையிற்சிக்கி நாசமடைகின்றார்களன்றோ. அந்தோ பாவம் பாவம்.

ஜெயசேகரன்:— என் காதற்களஞ்சியமே ஏது என்றுமில்லா இத்துயரம் உனக்கெங்கனம் நேரிட்டது? ஏன் உன் ஜாதியை நினைத்து இவ்வளவு வருந்துகிறாய்?

சித்திர:— "காதற்களஞ்சியமே! கண்ணே! என்செல்வமே!" என்ற இத்தகைய இனிய மொழிகளை மொழிந்து எங்கள் உருவத்தை மதியாயும் ரதியாயும் புகழ்ந்து இச்சகம் பேசித் தங்கள்காதலிற்கிரையாக்கி, கனிந்து மணமும் உருசியும் கூடியிருக்கும் பழத்தைப்போன்ற எங்களை, தங்கள் அவா தீர்ந்தவுடன் சாரமற்ற சக்கையை வீசியெறிவதுபோல், ஒதுக்கிவிடுவார்கள் இவ்வஞ்சக மானிடர்கள்.

ஜெய:— ஏதேது! வேதாந்த மதிகரித்துவிட்டது! நின்ஜாதியை நொந்து பேசுவதுடன் எங்களையும் இகழ்ந்து பேசுகின்றாய். உன் மனதில் யாது வியாகூலம்?

சித்திர:— என் மனோவியாகூலத்திற்குத் தாங்கள் யாது மாற்றுசெய்யப்போகிறீர்கள்? பெண்ணாய்ப் பிறந்ததே பெரும் வருத்தம். அதிலும், அன்பில்லாதாருடன் உறவாடுதல்மிகவும் வருத்தம். ஆகையால் என் வருத்தத்திற்கு அளவு யாது? அதைப்பற்றிக் கவலைப்படுவோர் யாரிருக்கின்றார்கள்?

ஜெய:— பெண்ணே! நாமிருவரும் அந்யோந்யமாயிருக்கும்வரையில் உன் மனக்குறை எனதாகவே முடியும். மேலும் வருத்தமுற்றவர்க்கு ஆறுதல் சொல்லுவது ஆரியரின் கடமையாம்.

சித்திர:— அந்யோந்யமென்னும் மொழி நமக்கேற்றதல்ல. அது அந்தரங்காபிமானமும் பூர்ண நம்பிக்கையுமுடையவர்களுக்கல்லவோ கூறுவது?

ஜேய:— அபிமானத்திலாவது நம்பிக்கையிலாவது நான் குறைந்தவனாகத் தோற்றுகின்றேனா? ஏதாவது உன்னிடமுரைக்காமல் மறைத்துவைத்திருக்கின்றேனா?

சித்திர:— அதையென்னிடம் கேட்பானேன்? தங்கள் மனதே கூறுமே.

ஜெய:— என் மனதிற்கொன்றும் தோன்றவில்லை உன்னிடம் பூரண நம்பிக்கையாயிருப்பதாகத்தான் என்னெண்ணம்.

சித்திர:— உ! ஊ! ஐயோ பாவம், தோன்றுமா! ஆமாம் அது எப்படித்தோன்றும்! புதுமாப்பிள்ளையாகப்போகிறீரல்லவா! நியாயந்தான்!

ஜேய:— சே! இதுதானு உன் வருத்தத்திற்குக் காரணம்? நியாயந்தான். நீ பெண்தானே, அதுதான் உன் பொறாமை உன்னை விடவில்லை. ஆயினும், நான் விவாஹம் செய்துகொள்வதில் உனக்கு என்ன தடை?

சித்திர:— எனக்கென்ன தடை? ஒன்றுமில்லை. மாதத் தடிகளிலும் வேதிலவிலும் சொன்ன காதல் மொழிகளை மறந்தனீர் போலும். நல்லது, எவ்விதமாவது விவாஹஞ்செய்துகொண்டு சுகமாயிருங்கள் நம்முறவு இத்துடன் நிறுத்திக்கொள்ளுவோம்.

ஜேய;— நான் விவாஹம் செய்துகொண்டால் நம்முடைய உறவு முடிவதேன்? அதற்கும் நம் சிநேகத்திற்கும் என்ன சம்பந்தம்?

சித்திர:— ஒரு மாதை விவாஹம் செய்துகொண்டபின் மறுமாதருடன் உரவாடுதல் அழகன்று.

ஜேய:— இனிய மொழியுடையாளே! நீ இத்தகைய வார்த்தைகளைப் பேசக்கேட்க எனக்கு வெகு ஆநந்தமாயிருக்கின்றது. ஆயினும் நான் விவாஹம் செய்துகொள்ளப்போகும் அக்கன்னியிடம் சற்றும் நான் காதல் கொண்டவனல்ல, அப்பெண்ணை எதற்காக விவாஹம் செய்துகொள்ளுகிறேனென்பது உனக்குத்தெரியும். அவளுடன் வரும் அந்த இராஜ்ஜியமே அவளை எவரும் விரும்பச்செய்யும்

சித்திர:— ஆனால், உமக்கு அவளிடமன்பில்லையா? இது உண்மை தானா? எனக்கு நீங்கள் கொடுத்த வாக்கு நம்பத்தக்கதுதானா?

ஜெய — அதற்கென்ன சந்தேகம். ஊரார் எதிரில் அவள் என் மனைவி. அந்தரங்கத்தில் நீதான் என் காதலி.

இவ்விதமாகச்சண்டையில் ஆரம்பித்த இவர்களின் சம்பாஷணை பிரீதியில் முடிந்தது. இவர்கள் சரச சல்லாபமாய்ப் பேசிக்கொண்டு சந்தோஷமாய்த்தங்கள் காலத்தைக்கழித்தனர். பேதைப்பெண், தன்னிடம் இனியமொழிகள் பேசும்ஜெயசேகரன் தன் மனதில் என்ன எண்ணம் கொண்டிருக்கிறானென்றறிந்தவளல்ல.

௨-வது அத்தியாயம்.

வஸந்த காலம் எக்கொடி செடிகளைப்பார்த்தபோதிலும் பசுமையான இளங்கொழுந்துகளால் அலங்கரிக்கப்பட்டு ஹேமந்தருதுவின் கொடிய குளிர்ச்சியால், "இனிநாங்கள் துன்பமடையோம்" என்றுசொல்வதுபோலிருந்தது. பறவைகள் உல்லாசமாய்ச் செடிகளின் கிளைகளிலுட்கார்ந்து சம்பாஷித்துக்கொண்டிருந்தன. பசுக்களும் பசும்புல்லை மேய்ந்துகொண்டு இடங்களில் அங்குமிங்கும் சஞ்சரித்துக்கொண்டிருந்தன. திவாகரன், தனது சகஸ்திர கரங்களுடன் இருளெனும் அரக்கனை வதைசெய்துகிழக்கில், வெளிக்கிளம்பினான். எப்பொருளைநோக்கிலும் அது வஸந்தகாலத்தின் ஆனந்தத்தையும் கடவுளின் அருளையும் புகழ்ந்துபேசுவதுபோலிருந்தது. நமது சரித்திரம் ஆரம்பித்த இர

ண்டாம்நாள் நீதிபுரியில் அரண்மனையைச்சார்ந்த நந்த
வனத்திலிருவர் சம்பாஷித்துக்கொண்டிருக்கிறார்கள்.
இவர்களைச்சற்று உற்றுப்பார்ப்போம். இவ்விருவரில்
ஒருவள் பெண்பால். இவளது ஆடையாபரணங்களும்
இவள் சம்பாஷணையின் ஒழுக்கமும் இவளை ஓர் உயர்
குலத்திற்பிறந்தவளாகத்தோற்றிற்று. இவளது பூரண
மதிபோன்றமுகவிலாசமும், மீனையொத்தகண்களும்,
வானவன் வில்லைப்போன்ற புருவங்களும், நீருண்ட
மேகங்களை நிந்திக்கும் நீண்டகூந்தலும், அழகிய அவ
யவங்களின் சிறப்பும் எம்மானிடனையும் இம்மானினி
யைக்கோரச்செய்யுமென்பதற்கு ஐயமில்லை. இப்பெ
ண்ணெதிரில்நிற்கும் பூமானே பூரண ஆக்ருதியுடைய
வனாய் நற்குண நற்செய்கைகளில் இம்மாதிற்குத் தா
ழ்ந்தவனல்லவென்று தோன்றிற்று. இவ்விருவரும்
பேசிக்கொண்டிருந்தபோதிலும் இவர்கள் முகத்தில்
அச்சமும் நாணமும் அமர்ந்திருந்தன. இவர்களில்,

குணசேகரன்:—“எட்டாக்கனிக்கு எம்பிக்குதித்தென்
னபயன்? தன்யோக்கியதைக்குத்தகுந்ததைத்தான் ஒவ்
வொருவனும் கோரவேண்டும். இதுவரையிலும் தங்
கள் தந்தை என்னிடம் வைத்திருந்த பிரியமே நான்
என்றும் மறக்கத்தகாதது அவர் அன்பிற்கடையாள
மாக எனக்குச் செய்திருக்கும் மரியாதைகள் எத்தனை
யோயிருக்க, முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்
டதுபோல் நான் உங்கள் கரத்தை நாடி மானபங்க
மடைவேனென்பது திண்ணம்” என்று கூறினன்.

மனோன்மணி:— ஆர்ய! நாமிருவரும் ஒருவர்மேலொ
ருவர் கொண்டிருக்கும் ஆசையைப் பிறவினர் அ
வமதியாதபடி விவாஹமென்னும் அச்சடங்கால்

காத்துக்கொள்ளாவிடில், நம் சந்தோஷத்திற்கும், வாழ்நாளுக்கும் பெருந்தீங்கு வந்துநேரிடும். ஆகையால், தாங்கள் எவ்விதமாயினும் மனதைஉறுதி செய்துகொண்டு என் தந்தையாரை, என்னை உங்களுக்கு மணஞ்செய்து கொடுக்கும்படி கேட்கவேண்டும்.

ரூண:— மனோன்மணி! நான் எவ்விதம் உன் தந்தையாரைஉன்னை எனக்கு விவாஹம் செய்து கொடுக்கும்படி கேட்பது? உங்கள் வீட்டுவழக்கப்படி பெண்கொடுப்பதும் கொள்ளுவதும் இராஜவம்சமேயன்றி, என்போன்ற சாதாரண வம்சத்தைச் சேர்ந்தவனுக்குக்கொடுப்பதில்லை. இது எனக்கு நன்றாய்த்தெரியும். நிற்க, உன்னை உன் தந்தை தன் மருமகனாகிய ஜெயசேகரனுக்குக் கல்யாணஞ்செய்துகொடுப்பதாய் நிச்சயித்திருக்கிறார். பிரீதிபுரத்தரசன், உன்னைத்தனக்குவிவாஹஞ்செய்துகொடுக்கமாட்டேனென்றதற்காக, நம் நகரின் மீதுபடையெடுத்துவருவதாகத்தூதனுப்பியிருக்கிறான். இப்படிப்பட்ட அரசர்களுக்குக்கிடைக்கத்தகாத உன்னையா எனக்குக்கொடுக்கப்போகிறார் உன் தந்தை?

மனோன்:— ஜெயசேகரனை நான் மணம்புரியேன். இது நிச்சயம்,

என்று மனோன்மணி சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது ஜெயசேகரன் அலங்காரபுருஷனாய் அவள் முன்னே பிராப்தமாயினான்.

ஜெய:— மனோன்மணி! உன்னைத்தேடிக்கொண்டுதான் இங்கு வந்தேன். அதுயார்!—குணசேகரா! ஏது இவ்வளவு காலையில் இந்தவனத்தில்!

மனோன்:— ஊம். வாருங்கள். அத்தான் என்னைத்தேடுவானேன்? (தனக்குள்) இராமேஸ்வரம் போனாலும் சனீஸ்வரன் விடானென்பது சரியாயிருக்கிறது. ஆயினும் இவனிடம் கோபங்காட்டக்கூடாது. (வெளியாய்) அத்தான் ஜெயசேகரரே! என்ன விசேஷம்?

ஜெய:— பிரீதிபுரத்தரசன் உன்னைத் தர்மமாயடைய முடியாததால் நம்நாட்டின்மேற் படையெடுத்து நமதிராஜ்யத்தை ஜெயித்து உன்னையும் ஜெயக்குறியாகத் தன்னாட்டிற்குக்கொண்டுபோய் மணம்புரிவதாய்த் தூதனுப்பியிருக்கிறான். அத்துஷ்டனுடைய மமதையடக்கி உனதுகரத்தையும்பெற உன் தந்தை எனக்கு அநுமதியளித்திருக்கிறார்.

மனோன்:— ஐயோ பாவம். எவ்வளவு பைத்தியக்காரத்தனம்? உங்களையா சண்டைக்குப்போகச்சொன்னார், நீங்கள் திரும்பி வராவிடில் நான் என்ன செய்வது; வேண்டாம், நீங்கள்போகவேண்டாம் சண்டைக்கு. நீங்கள் சண்டையில் மடிந்தால் இந்தகைய அழகியபுருஷனெனக்குக்கிடையானே! நல்ல உணவுகளை உண்டு சுகமான மெத்தையிற் படுத்துறங்குங்கள்.

ஜெய:— என்ன, மனோன்மணி! என்ன என்னைக்கேலிசெய்கிறாய். இராஜ வம்சத்திற்பிறந்த யான

போர் செய்யத்தக்கவனல்லனே?

மனேன்:— அத்தான்! என்ன இவ்வளவு சீக்கிரம்கோபித்துவிட்டீர்கள்? நாளையதினம் என்கணவராகப் போகிற நீங்கள் உங்கள் பெண்டாளாகப்போகிற மங்கையின் பரிகாசத்தைப்பொறுக்கக்கூடாதா?

ஜேய:— பெண்கள் அதிகமாய்ப்பேசுவது எனக்கிஷ்டமில்லை.

மனேன்:— ஆண்பிள்ளைகள், பெண்களுக்கவசியமில்லாத மொழிகளை அவர்களிடம்பேசுவதில் எனக்கிஷ்டமில்லை.

ஜேய:—ஆனுலென்னைமணம்புரிய இஷ்டமில்லையோ?

மனேன்:— உம்மை மணக்கும் எண்ணம் நான் கனவிலும் கொள்ளவில்லை.

ஜேய:— உன் தந்தையின் வாக்கைக்கௌரவப்படுத்த உனக்கு இஷ்டமில்லையா?

மனேன்:—அதற்கு என் தந்தைச்குப்பதிலளிப்பேன்.

ஜேய:— இதை உன் தந்தையினிடமுரைக்கவா?

மனேன்:— அச்சிரமம் உமக்கு வேண்டியதில்லை— உங்களிஷ்டம்.—குணசேகரரே! நான் அந்தப்புரத்திற்குப் போகிறேன், என்று குணசேகரனை நோக்கிச்சொல்லிவிட்டு அரண்மனைப்பக்கம் செல்லலானுள். குணசேகரனும் பாட்டையைநோக்கிச்சென்றுன். ஜெயசேகரனும் பின் தொடர்ந்தான்.

3-வது அத்தியாயம்.

அஸ்தமிக்க இரண்டு நாழிகை நேரமிருக்கும். அர்த்த சந்திரன் பாண்டு பிடித்தவன்போல் ஒளிபிழ

ந்து வெளுத்து ஆகாயத்தில் விளங்கினான். தின சரி வேலைகள் முடித்துவிட்டோமெனும் சந்தோஷத்துடன் சொர்ணவர்ணமான மேகங்களின் நடுவில் உல்லாசமாய் சயனிக்கச்சென்றனன் சூரியன். இரவில் சஞ்சரிக்கப்போகின்ற வஸந்தனுக்கு தினகரனின் கொடுமையாலுண்டாகும் தாபத்தைப்பொறுக்கமுடியாதெனும் எண்ணங்கொண்டவன்போல் மாருதன் தனது அகோசரமான விசிறிகளால் இனிமையான காற்றை வீசி வேனிற்கொடுமையைக்குறைக்கலாயினன். பக்ஷிவர்க்கங்கள் சலசலவென்று ஒன்றோடொன்று பேசுவது இனிச்சூரியனைக்காண்போமோ என்று பிரலாபிப்பது போலிருந்தது. பேதை ஜனங்கள் தத்தம் வேலையைச்செய்துமுடித்து ஆநந்தத்துடனுண்டுறங்குவதற்குத்தம் அகங்களை நாடினர். ஆக்கள் தங்கள் வயிறு நிரம்ப உண்ட உற்சாகத்துடன் அம்மாவென்று கத்திக்கொண்டு மண்மேடுகளை முட்டுவதும் ஒன்றையொன்று துரத்துவதுமாக விளையாடிக்கொண்டிருந்தன. இப்படிப்பட்ட ஆநந்தமானசமயத்தில் குணசேகரன் தான் மனோன்மணியிடம் கேட்ட வார்த்தைகளை நினைத்து மகிழ்ந்து களிப்புடன் நந்தவனத்தில் உலாவச்சென்றனன். அச்சமயத்தில் ஜெயசேகரன் தான் பட்ட அவமதிப்பை நினைத்து வருந்தினவனாய் எவ்விதமேனும் காலம் கழிக்கவேண்டுமெனும் எண்ணத்துடன் அதே நந்தவனத்தை நாடினான். ஒருவரையொருவர் குசலப்பிரச்னம் கேட்டானபிறகு சரசமாய்ப் பல சமாசாரங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்து கடைசியில் மாதர்களின் நடத்தையைப்பற்றிப்பேசலாயினர், இப்படிப்பேசிக்கொண்டிருக்கையில்,

குணசேகரன்:— ஆனால் இப்பெண்பாலிடம் உமக்கு நம்பிக்கையேயில்லையா?

ஜெய:— என்ன இவ்விதமானகேள்விகேட்கிறீர்கள்? பெண்களின்வார்த்தையையும் நம்பலாமா! சிவ! சிவ! இவர்களின்மாயவலையிற்சிக்கி எத்தனை பேர் அவஸ்தைப்பட்டவர்கள். "ஸ்திரீ புத்தி பிரளயாந்தக:" எனும் வார்த்தையை மறந்தனிரோ?

குண:— அவர்களிலும் உத்தம ஜாதியில்லையா? நற்குணமும் நற்செய்கையும் உடையவர்களில்லையா? அப்படிப்பட்ட உத்தமப்பெண்களால் எத்தனை பூமான்கள் அளவற்ற சுகமடையவில்லை!

ஜெய:— சரிதான். நீங்கள் கிருதயுகத்தில் இருக்கிறாப்போலிருக்கிறது. அத்தகைய மாதர்கள் இக்காலத்திலில்லை. பேசுவார்பேதைமானிடரிடம் புன்னகையுடன். அன்பையும் இன்பத்தையும் தங்கள் முகக்குறியால் காட்டுவார். அழியா ஆசையுடையவர் போல் நடிப்பார். ஆயினும் இவர்களின் வார்த்தைகளை நம்பலாகாது "சேலைகட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்று தியங்கித்தவிப்பரே" என்றமொழிகள்வீண்மொழிகளோ?

குண:— ஆனால் இம்மண்ணுலகில் ஒரு ஸ்திரீயேனும் நம்பத்தக்கவளில்லையா?

ஜெய:— கிடையவே கிடையாது. எனக்கு நிச்சயமாய்த்தெரியும்.

குண:— எனக்கு நீங்கள் சொல்லுவதில் அவ்வளவு உறுதியில்லை.

ஜெய:— ஓ ஹோ! சரிதான், நீர் சிறுவர்தானே? உங்களுக்கு இவ்வுலக அநுபோகம்போதாது. ஒருவேளை நீங்கள் மனோன்மணியை நிரம்ப சுத்தமாக நினைத்திருக்கலாம், ஆனால்———

குண:— என்ன சொன்னீர்! இராஜ குமாரியாகிய மனோன்மணியையா? நிதானமாய்ப் பேசும்.

ஜெய:— எதற்கு வீணாய்ச்சினம் கொள்ளுவது நான் சொல்வதைக்கேளும் சற்று மனோன்மணியும் அவ்விரக்கமற்ற ஜாதியைச்சேர்ந்தவள்தான்.

குண:— போதும். போதும், உம்மை இம்மொழிகளுக்குச்சும்மாவிடமாட்டேன். ஜாக்கிரதை-

ஜெய:— ஏனையா உமக்கு இவ்வளவு கோபம் அவளைப்பற்றிப்பேசுவதற்கு நான்பாத்தியமுள்ளவனல்லவோ? உமக்கேன் இவ்வளவு அக்கறை?

குண:— அனாதைகளாகிய மாதர்களைநிந்திக்குங்கால் யார்தான் அவர்கள்கக்ஷியை எடுத்துக்கொள்ளார்? அதுநிற்க, இப்பெண்சிரோமணி யாதொன்றுமறியாதவள்; நற்குணசேகரியென்று இவ்வினிய மொழியாளையே சொல்லலாம். மேலும் அவள் என்காதலி. ஆகையால் அறிந்துபேசவும்.

ஜெய:— ஐயோ பாவம்—உம்— இந்தச் சமாசாரம் எனக்குத்தெரியாமற்போய்விட்டது. என்னசெய்கிறது? எல்லாம் தலைவிதிதான். உம்மைப்போன்ற சிறந்த குணமுடைய பூமான் இம்மாதிரியான கன்னியிடமும்——ஊ, நான் சொல்லிப்பிரயோஜனமென்ன? உங்களுக்குக்கோபம் வந்துவிடும்.

குண:— இல்லா மொழிகளைச்சொன்னால் யாருக்குத் தான் மனம் நோகாது?

ஜேய:— எந்த சிநேகிதன் தன் சிநேகிதனுக்கு மனம் நோகாது நன்மையுரைத்திருக்கிறான்?

குண:— நன்மையுரைத்தால் மனம் நோவது அநியாயமே.

ஜேய:— நான் இப்பொழுது சொல்லுவது உமக்கு நன்மையாகையால் உம்முடைய மனதிற்கு ஒவ்வாது. நாவுக்கு ருசியாத ஔஷதமே உடலுக்கு நன்மைதரும். ஆகையால் என் வார்த்தைகள் உமக்கு மிக்க துக்கத்தை விளைவிக்கலாம்.

குண:— உங்கள் மொழிகளை நம்புவதற்குத்தக்க அத்தாக்ஷியிருக்குமாயின் நான் மனம் நோகேன்.

ஜேய:— நான் சொல்லுவதை உங்கள் கண்முன் உறுதியாக்கிவிட்டாலோ———

குண:— நான் இந்நாட்டைவிட்டு தேசப்பிரஷ்டனாவதுமன்றி அன்றுமுதல் என் ஜீவகாலத்தில்வேறு மாதர்களின் மொழிகளையும் நம்பேன்.

ஜேய:— ஆனால் சரி. இப்பொழுது அதிக அன்பு வாய்ந்தவள்போற் பாசாங்கு செய்யும் மனோன்மணி அந்தரங்கத்தில்என்பேரிற்காதல் கொண்டவள். அதற்கு உறுதி இன்றிரவு என்னை, மேற்புறத்தில் கட்டிடத்தைச்சார்ந்த நந்தவனத்திற்கு 10½ மணிக்கு வரச்சொல்லி எழுதியிருக்கிறாள். இதோ பாருங்கள்.

'என் ஆருயிர்ச்செல்வரே !

தாங்களின்றிரவு நம் மஹாலின் மேற்புறத்தில் நந்தவனத்திற்கு 10½ மணிக்கு வருவீராகில் நான் நூலேணியை மூன்றாவது உப்பரிக்கையின் சாளரத்திலிருந்து கட்டிவிடுவேன். நாமிருவரும் சம்யோகமாய்க் காலங்கழிக்கலாம். தங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்,

மனோன்மணி.'

இக்கடிதத்தைக்கண்டான் குணசேகரன். இவன் காட்சிக்கு ஒன்றும் புலப்படவில்லை. திகைத்துச் சிறிதுநேரம் நின்றான்; ஹாவென்று பெருமூச்செறிந்தான்; முகம் முழுவதும் கோபத்தினாலும் துக்கத்தினாலும் க்ஷணக்ஷணம் சிவப்பாயும் வெளுப்பாயும் மாறினது. இவனுடைய திடமான சரீரம் புசற்காற்றில் நடுங்கும் குசத்தைப்போல் நடுங்கினது. மாசற்ற சித்திரை மாசத்து ஆகாயத்தைப்போல் தாவள்யமாயிருந்த இவன் மனம் பொங்கும் கடலைப்போல் குழப்பமுற்றது, தன் கோபத்திற்கிரையாகவேண்டிய மனோன்மணி அங்கில்லாததினால் தன் ஆக்கிரஹத்தை முழுமையும் காட்டினான் ஜெயசேகரன்பேரில். உருவினான் தன் உடைவாளை; கம்பீரமாய் நோக்கினான் ஜெயசேகரனை; "வ சண்டாளா! மித்ருத்ரோகி! உன்னைக்காத்துக்கொள். இம்மண்ணுலகில் உன் வாழ்நாட்கள் முடிந்துவிட்டன. கோர நரகம் உனக்காகக்காத்திருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே பாய்ந்தான் ஜெயசேகரன்மேல். அவனும் அதையெதிர்பார்த்தவன்போல் ஓடி விலகினான். தன் குறி தப்பினதும் கோபமும் சற்றுக்குறைந்தது குணசேகரனுக்கு. உடனே

ஜெயசேகரன்:— என் நண்பரே! ஏதுஇவ்வளவு ஆத்திரம்? பாவம் உங்கள் மனது நோவதற்குக்காரணம் உண்டு. ஆயினும் அவசரமாகாது. எதற்கும் பொறுமைவேண்டும். நீங்கள் இவ்வளவுசீக்கிரத்திற்கோபித்துக்கொள்ளுவீரென்றால் நான் இக்கடிதத்தைக்காட்டியிருக்கமாட்டேன்— என்ற இவ்விதமான சாந்தவசனங்களைக்கேட்ட குணசேகரன் மனம் சற்று சாந்தமடைந்து தான் பெரும்பிழை செய்துவிட்டோமென்று துக்கித்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டான் ஜெயசேகரனை.

ஜெய:— என் அன்புள்ள சிநேகிதரே! நீங்கள் இதற்காக வருந்தவேண்டாம். யாருக்கும் இது சகஜந்தான். இக்கடிதத்திற்கண்டபடி நாமிருவரும் இரவு $10\frac{1}{2}$ மணிக்கு கங்கவனத்திற்குச் செல்லுவோம். அப்பொழுது பெண்களைப்பற்றி நான் கொண்ட அபிப்பிராயம் சரியா தப்பா வென்று உங்களுக்கே விளங்கும்.

குண:— நல்லது அதையும் பார்ப்போம். நான் $10\frac{1}{2}$ மணிக்கு வருகிறேன். எனக்கு தேகம் அசௌக்கியமாயிருக்கிறது. நான் வருகிறேன்—என்று சொல்லிவிட்டுப்புறப்பட்டான்.

இக்கதை படிக்கும் நண்பர்களே! குணசேகரனின் நிலைமையை நாம் உங்களுக்கு உரைக்கவேண்டுமா? என் செய்வான் பேதை. பாவம். இவன்கட்டிய கோட்டைமுழுதும் சுக்குத்தூளாய்ப்போய்விட்டது. மனக்குழப்பத்தால் தத்தளித்தான் உத்தமன். ஆறுவார் இவன் வருத்தம்? தாம் காதலித்த கோதையர்

துரோகிகளென்று அறியும் மானிடர்களன்றோ!.. இவன் கால்கள் நடந்தன எங்கேயோ. இவன் கண்கள் நோக்கின எவற்றையோ. கொலைக்கழைத்துச் செல்லும்குற்றவாளியின் மனம்போலிருந்தது இவன் மனம் இந்தநிலைமையில் தன்வீட்டை நாடினான். சாய்ந்தான ஓர் தலையணையின்மீது. இவன்வியாகூலத்துடன் இவனை விட்டுவிட்டு ஜெயசேகரனிருக்குமிடஞ்சென்று அவனைக்கவனிப்போம். அவன் ஒருதரம் நகைத்தான். ஒருதரம் சந்தோஷமாய் நடந்தான். சுற்றும் ஒருதரம் பார்த்தான். பின்வருமாறு நினைக்கலானான். "போரில் தீவைத்துவிட்டேன், இனிப்பற்றியெரிப்பது வாயுபகவானின் கடமையே. பேஷ் ஜெயசேகரா! நின்மதியே மதி. உனக்கு நிகர் இவ்வுலகத்தில் யாரிருக்கிறார்கள்? இன்றிரவு நீ இவனுக்குச்சொன்னபடி இக்காரியத்தையும் முடித்துவிடுவாயானால் இவன் தேசப்பிரஷ்டனாய் விடுவான். இவன் துலைந்தால் சனிவிட்டது. பிற்பாடு நான்தான் தனிக்காட்டரசன். சபையோர்கள் எவ்வளவுமட்டும் நமக்கு—அல்லது இக்கிழவன் (அரசன்) எவ்வளவு; என்னையிகழ்ந்துபேசின இம்மங்கையின் மானத்தை பங்கஞ்செய்வேன். இவள்தந்தையின் கண்களால்நீர்த்துளிகள் உதிரச்செய்வேன். பார் என்சாமர்த்தியத்தை. ஹா! ஹா! ஹா! இந்நீதிபுரத்தையே ஓர் ஆட்டம் ஆட்டிவைக்கிறேன். மனமே! பதறாதே. பொறுத்தார் பூமியாள்வார். சற்றுப்பொறு. ஒன்றிற்கும் உதவாத இந்நீலி சொன்ன அவமதிப்பான வார்த்தைகளுக்கு இவள் என்காலில் விழுந்தபோதிலும் இவளை மன்னிக்கமாட்டேன். ஏதோ ராஜகுமாரியென்னும் மமதையால் என்னை அவமதித்தாளன்றோ.

கலிச்குப்பார்ப்பாள் குறுக்கே' என்றதுபோல் இந்தக் குணசேகரன் எனக்குக்குறுக்கே நின்றான். இவனும் இன்றுடன் தொலைந்துவிடுவான். நாளைமுதல் அரசாட்சி நம்மதேயாம். இப்பொழுதேவீட்டிற்குச்சென்று இரவு 10½ மணிக்குவேண்டிய ஏற்பாடுசெய்வேன்" என்று இவ்விதமான எண்ணத்துடன் நடந்து சென்றான்.

4-வது அத்தியாயம்.

மூன் அத்தியாயத்தில்நாம் சொல்லிவந்த அச்சமயத்திலேயே நீதிபுரத்து அரண்மனையில்.மனோன்மணி தன் தந்தைவரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் தந்தையும் அவளிருக்குமறையுள் நுழைந்தார். தந்தையைக்கண்டவுடன் வெகு வணக்கமாய் எழுந்துநின்று வந்தனஞ்செய்து அஞ்சலிபந்தனம் செய்தவளாய் அவர் மொழிகளை யெதிர்பார்த்தவள்போல் காத்திருந்தாள்.

கருணாகரன்:— என் கண்ணே! நீயேன் நின்றிருக்கிறாய்? உட்காரு அவ்வாசனத்தின்மீது. உன்னுடன் சில சமாசாரங்கள் பேசவேண்டும் எனும் எண்ணங்கொண்டவனாய் இவ்விடம் வந்தேன்.

மனோன்மணி:—என்னருமைத்தந்தையே! தங்களிஷ்டப்படி நடக்கத் தயாராயிருக்கிறேன். எதைச் சொன்ன போதிலும் கேட்கத் தயாராயிருக்கிறேன்.

கரு:— என் செல்வமே! உன் இனிய மொழிகளைக் கேட்கவே எனக்கு அமிருத பானம் செய்தது போலிருக்கிறது. நானோ வயது முதிர்ந்த கிழவன். இன்றைக்கோ நாளைக்கோவென்று எமன்

வாலை எதிர்பார்த்துக்கொண்டிருப்பவன். நமது நாடோ மிகப்பெரிது. எனக்குப்பிறகு இப்பெரிய பாரத்தை மேற்கொள்ள ஒரு புத்திரனை ஈசன் எனக்கு அளிக்காவிட்டாலும், நின்போன்ற அதிபுத்திமதியாகிய பெண்ணேனும் அளித்தார். ஆயினும் இப்பாரத்தை முழுவதும் உன்மேல் சார்த்த எனக்கிஷ்டமில்லை. ஏனெனில் நாளையதினம் ஒரு பிழைநடந்தால் பெண் இராஜ்யம் தானே என்னும் அபவாதம் வரலாகாது. ஆகையால் நீ சீக்கிரத்தில் ஓர் பூமானை மணம்புரியவேண்டுமென்பது என் கோரிக்கை.

மனோன்:— அப்பா! இப்பொழுது இதைப்பற்றிக் கவலைவேண்டாம். நீங்கள் உயிரோடிருக்கும் வரையில் வேறு பூமானுடன் என் அன்பைப்பங்கு பிரித்துக்கொள்ள எனக்கிஷ்டமில்லை. மேலும் தங்கள் வயோதிக காலத்தில் தங்களைப்பற்றிக் கவனிக்கக்கூடியவர் என்னைத்தவிர வேறொருவருமில்லையென்றே நினைக்கிறேன்.

கரு:— என் குழந்தாய்! உன்னைத்தவிர என்னைப்பற்றிக் கவலைப்படுவோர் வேறொருவருமில்லையென்பது உண்மையே. ஆயினும் நீ உன்காலத்திற்குத் தகுந்த கோலத்திலிருந்து உன் அன்புடையவனுடன் கூடி, என்விருத்தாப்பியத்தில் ஸ்திரீபூமான்களாக நீங்களிருவரும் என்னைக்காண வரவும் என்னைப்பற்றிக் கவலைப்படவுமிருந்தால் அது எவ்வளவு நேர்த்தியாயிருக்கும்.

மனோன்:— அருமைத்தந்தையே! என் அன்பிற்கு

அரசன் ஒருவனும் இருப்பதாகத்தெரியவில்லை.
நீங்கள் ஒருவர்தான் என் அன்பிற்குப்பாத்திய
முடையவர். ஆகையால் எவ்விதத்திலும் உங்க
ளைவிட்டு வேறொருவரிடம் அன்பைச் செலுத்த
அபிப்பிராயமில்லை எனக்கு.

சரு:— அம்மா! உன் மிகுந்த அன்பால் இவ்வாறு
பேசுகின்றாய். ஆயினும் உன் தந்தை நான். ஆ
கையால் உனது க்ஷேமத்தையே தேடவேண்டும்.
நீ இப்பொழுது யௌவனமடைந்துவிட்டாய்.
உன் கரத்தை நாடி வெகு பேர்கள் என்னைக்
கேட்கிறார்கள். எனக்கு உன்னை வேறுநாட்டரசர்
களுக்கு விவாஹஞ்செய்துகொடுக்க இஷ்டமில்லை
எனது சகோதரியின் புத்திரனாகிய ஜெயசேகர
னுக்குவிவாஹம் செய்துகொடுப்பதாக எண்ணி,
அவனை உன் வீரனாகயேற்படுத்தி, பிரிதிபுரத்த
ரசனுடன் போர்செய்ய அவனையே அனுப்புவ
தாகத் தீர்மானித்திருக்கிறேன். ஆகையாலவன்
உன்னை நாடி வருவானாகில் அவனுக்குத் தக்க
மரியாதைசெய்து அவனன்பைச் சம்பாதித்துக்
கொள்ளுவாய்.

மனோன்:— அப்பா! என்னையிதுவரையிலும் தாய்
போல வளர்த்துவந்து இப்பொழுது ஜெயசேக
ரனுக்கா விவாஹம் செய்துகொடுக்கப்போகிறீர்.
கள், இப்பெரிய நாட்டில் எனக்கேற்ற கணவன்
உங்களுக்கு வேறொருவருமில்லையா?

சரு:— ஏனம்மா உனக்கு அவனை விவாஹம் செய்து
கொள்ள இஷ்டமில்லையா? சரிதான் அது உனக்
கெப்படித்தெரியும். சிறு குழந்தைதானே. நீ

நாளைக்கு விவாஹமானபிறகு "என் கணவரைப் போன்றவர் ஒருவருமில்லை" என்று பெருமை பாராட்டிக் கொள்வாய். இப்பொழுது சிறுமி தானே. ஜெயசேகரன் நல்ல அழகுவாய்ந்தவன் யுத்தத்திற் சிறந்தவன். நல்ல புத்தியுடையவன் தவிர நம் வம்சத்தைச்சேர்ந்தவன். அவனுக்கு என்ன குறைவு.

மனோன்:— எல்லாமறிந்த உங்களுக்கு நான் சொல்லவேண்டுமா? புலி பார்க்க வெகு அழகாயிருக்கிறதென்று அதை யேன் ஆலிங்கனம்செய்துகொள்ளக்கூடாது, "மணினாபூஷிதஸ் ஸர்ப:கிமஸௌ ந பயங்கர:" அரவத்தின் தலையில் நாகரத்தினமிருக்கிறதென்று அதைமுத்தமேனிடக்கூடாது அதைப்போல் இவனையும் நான்விரும்பேன்.

சரு:— உன் எண்ணம் அவன் நல்லவனல்லவென்று? எனது தங்கையின் குமாரனாகிய ஜெயசேகரன் உன்னிடம் இவ்வித அபிப்பிராயத்தைச் சம்பாதித்துக்கொள்ள என்ன செய்தான்.

மனோன்:— நாம் ஒவ்வொன்றையும் ஒரு காரணத்தினாலோ வெறுக்கிறோம்? அல்ல; நமதுமனஸ்திதிக்கும் அப்பொருளின் இயல்புஉருவிற்கும் ஒற்றுமையில்லாததே காரணம், ஆகையால் இஜ்ஜெயசேகரன் எனக்கு அவசியந்தீங்கு செய்யவேண்டுமென்பதில்லை. அவனுடைய முகமே அவன் குணத்தைக் காட்டுகிறது. அகத்தின் அழகு முகத்தில் தெரியுமன்றோ?

கரு:— பேஷ்! கேவலம் அவன் முகத்திலிருந்தே அவன் நடத்தையைக்கண்டுபிடிக்கவல்லவளா? இன்னும் சிறிதுநாழிகையில் என் குணத்தையும் கண்டுபிடித்துவிடுவாய் போலிருக்கிறது. பைத்தியமே! உனக்கென்ன தெரியும். சிறு குழந்தை. நான் உனது தந்தை. உன்க்ஷேமசவுக்கியங்களைப் பற்றிக் கவனிக்கவேண்டியவன் நான். என் அருமைப்புத்திரியைப்போல் என்மனம் கோணமல் நீ நடந்துகொள்ள வேண்டும். ஆகையால் நீ இஜ் ஜெயசேகரனை மணம்புரியவேண்டுமென்பதுஎன்னெண்ணம். அதற்குத்தகுந்தபடி நடந்துகொள்.

மனோன்:— உங்கள் மனதிற்கு விரோதமாய் நடந்துகொள்ள எனக்கு இஷ்டமில்லாவிடினும் நான் இக்காரியத்தில் உங்கள் யோசனைக்கு இணங்க என் மனம் ஒப்பவில்லை. ஆகையால் உங்கள் மன்னிப்பைக் கேட்டுக்கொள்கிறேன்.

கரு:— ஹா! அப்படியா? என் எண்ணத்திற்கிணங்க உனக்கிஷ்டமில்லையா? சரி; நான் உன் தந்தை; அன்றியும் இந்நாட்டரசன். நீ என்பெண்ணென்று நல்மொழிகளால் சொல்லிப்பார்த்தேன். இணங்காவிடில் இதனால்வரும் கஷ்டத்தை நீதான் அனுபவிக்கவேண்டும் — என்ற இக்கடுத்த வார்த்தைகளை உரைத்துவிட்டுத்தன் சையாக்கிரகத்தை நாடினான் கருணாகரன். தந்தை தன் அறைவிட்டகன்றதும் அடங்காத் துயரங் கொண்டவளாய் தன் படுக்கையிற்படுத்துத் துக்கித்தாள் மனோன்மணி.

OFFICE OF ... 7-JAN 1919 MADRAS

5-வது அத்தியாயம்.

மணி $10\frac{1}{2}$ ஆவதற்கு இன்னும் 5 நிமிஷமிருக்கின்றது. மேற்புறத்தில் அரண்மனையைச்சார்ந்த நந்தவனத்தில் நமது குணசேகரனும் ஜெயசேகரனும் ஓர் மரத்தின் நிழலில் நின்றுகொண்டிருந்தார்கள் அடிக்கடி குணசேகரன் தான் வைத்திருந்தகைக்கெடிகாரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். இருவரும் களவு செய்வதற்காயத்தமாயுள்ள இருதிருடரைப்போலிருந்தனர். புல்லின்பேரில் மெதுவாக அடிகளை வைத்துக் கொண்டு அங்குமிங்கும் எட்டிஎட்டிப்பார்த்துக்கொண்டிருந்தனர். மெல்லிய குரலில் அடிக்கடி ஜெயசேகரன குணசேகரனுக்கு எச்சரிக்கை செய்து கொண்டிருந்தான். சூத்திரப் பதுமைபோல் விளங்கினான் நமது கதா நாயகன். சித்தப்பிரமை கொண்டவன்போல் நடித்தான் குற்றமற்றவன். நற்குணமுடையவர்களுக்கு ஏதேனும் மனக்கலக்கம் நேரிட்டால் அவர்களின் கதி யிதுதான். கவலையெனும் கடலில் மூழ்கி ஆகார விஹார நித்திரைகளை, இழந்து காலதேச வர்த்தமானங்களில் பற்றற்று சமாதியிலாழ்ந்திருக்கும் முனிவர்களைப் போலிருப்பார்கள். இவ்வித மாய்க்கழித்தனர் 5 நிமிஷம். கடைசியில் மேடையின் மூன்றாவதுஉப்பரிகையிலுள்ள ஜன்னல் திறக்கப்பட்டது. நூலேணியும் தாழ்த்தப் பட்டது. ஜன்னலின் இடைவெளியில் தோன்றிய விளக்குவெளிச்சத்தில் தோன்றினாள் ஒரு மாது. மெல்லெனக் கனைத்தாள். தன் விரல்களைச் சொடுக்கினாள். சந்திரனுடையவெளிச்சத்தில் இம்மங்கையின் ஆடை இராஜபுத்திரியின் ஆடையாயிருந்தது தலையில் கிரீடம் வகித்திருந்தாள். மாதின் உருவ

ஞம் மனோன்மணியின் உருவம் போலிருந்தது. கோ
ணதையள் ஜன்னலில் தோன்றினவுடன் ஜெயசேகரன்
மெதுவாய் மாத்தின் மறைவிலிருந்து வெளியே வந்
தான். நிலவில் நின்றுகொண்டு குணசேகரனை உற்றுப்
பார்த்தான். ஒருதரம் கனைத்தான். சரசரவென்று நா
லேணியிலேறினான். ——"பிராணேசா! நீங்கள் வரு
வீரோ என்று எதிர்பார்த்திருந்தேன்" என்ற இனிய
மொழிகள் குணசேகரனின் செவியில் இரும்புருக்கி
வார்த்தாற்போல்விழுந்தன. உடம்பெல்லாம் ஒருதரம்
நடுங்கினது. இது போதாதென்று ஜெயசேகரன் உப்
பரிகையின் மீதேறினவுடன் அங்கிருந்தமாதை இரு
கரங்களாலும் கட்டித்தழுவி முத்தமிட்டான். போதும்
போதும் இனிக் கண்கள் காணமாட்டா. இவன் செ
வியில் அக்கருங்குழலாளின் மொழிகள் சப்தித்துக்
கொண்டிருந்தன, ஹா! வென்றலறினன் குணசேகரன
தன் பக்கத்திலிருந்த வாளை உருவி இரண்டாய்முறித்
துக் கீழேயெறிந்தான். — வேண்டேன். இனிவேண்
டேன். இவ்வுலகவாழ்க்கையை நம்பேன். நம்பேன் இ
னிக் கருத்த விழியுடையார்களை. பயோமுகவிஷ கும்
பத்தைப்போன்றவர்கள் இம்மாதினிகள். மூடராம் மா
னிடர்கள் இக்கல் நெஞ்சுள்ள மங்கையரைப்புகழ்ந்து
பேசுகிறார்கள். ஐயோ குணசேகரா! உன் தலைவிதி இவ்
விதமாயிருக்கிறது" என்று தன்னுள் தான் துக்கித்துக்
கொண்டு ஓடினன் குணசேகரன். இவன் தன் நெருக்
கத்தைவிட்டு ஓட எத்தனித்தானேயொழிய துயரம்
அவனைவிட்டோடவில்லை. காலையில் இவன் சந்தோஷ
மாய் மனோன்மணியிடம் பேசிக் கொண்டிருந்ததும்
இப்பொழுது இவன் துயர்க்கடலில் மூழ்கியிருப்பதும்

தான், காலத்தின் கோலம் என்பர். — "நெஞ்சமே! இம்மானிட வாழ்வு நிச்சயமா?" — அனிச்சிதமாய் நீர்மேற்குமிழி போன்ற இவ்வாழ்நாட்களைத் திா மென்றெண்ணி ஈசனால் தங்களுக்களிக்கப்பட்ட நன் மதியையிழந்து என்றும் துயரமெனும் கடலிலேயே மூழ்கியிருக்கிறார்கள் அல்லவோ? இப்பேதை மானிடர்கள், பெரும் ஐசுவரியத்தையும்உயர்ந்த உத்தியோகத்தையும் கொடுத்த அத்தெய்வம் இவனுக்கு மனச் சாந்தத்தை கொடுக்கலாகாதா? இதற்கு மறுமொழி படிப்பவர்கள் தான் சொல்லவேண்டும்.

6-வது அத்தியாயம்.

'மனமே! ஆரைத்தான்விட்டது காலகதி. பிரம்மதேவன் உன்னை சிருஷ்டிக்கும் காலத்தில் உன் தலையில் இவ்வாறெழுதினான், என் வருந்துகிறாய் இன்பம் தேடுவோர்க்கு துன்பமும் சார்ந்திடும், இகழ்ச்சியுடையார் மகிழ்ச்சியடைவார். உன்னிலும் சிறந்தவம்சத்தில் பிறந்தவர்கள் எத்தனைப்பேர் பாடுபடவில்லை. ஐயோ? என்ன ஆறுதல் சொல்லியும் என்மனம் ஒப்பேனென்கிறதே, அக்காதகியுரைத்த அம்மொழிகள் என் செவியில் பற்றியெரிகிறதே, அவனை அவள் ஆலிங்கனம் செய்ய என் கண்கள் குருடாய்விட்டனவே அப்பா குணசேகரா! இனி உனக்கு இவ்வுலகத்தில் வேண்டியதொன்றுமில்லை. இனி இக்கோரவனத்தில் உன் காலம்கழித்துவிடுவாய், இனி இங்குசஞ்சரிக்கும் இப்புலிகரடிகளே உன் உறவினர், இங்கிருக்கும் இத் தூர்க்கங்களே உன் வாசக்கிருகங்கள்உதிரும் சருகுகந்தமூலபலங்களே,உனக்காக நியமிக்கப்பட்ட விசித்திர பக்குவான்னங்கள்,இனி நின்தியானமே கடவுள், விடு

மண்ணுலகாசையை, நாடு விண்ணுலகோன் பாதத்தை, தேடு பிறவி அற்றமையை.' என்று சுவாகதமான மொழிகளுடன் தனனை மறந்தவன் போல், கோர மிருகங்களாலும், உயர்ந்த மலைகளாலும், அடர்ந்த புதர்களாலும், நிறைந்த வனத்தில் தாமரையிலையில் தங்கும் நீர்த்துளிபோல் தவித்துக்கொண்டிருந்தான். இவன் ஆடைகள் முள்பட்டு கிழிந்திருந்தன. இவன் கேசமானது கட்டற்று நேசமில்லா சிநேகிதர்களைப்போல் விளங்கின. இவன்கண்கள் கன்றையிழந்த பசுவின் கண்ணைப்போல் துக்கத்தால் மங்கியிருந்தன ஆனால் இவன் ஒருவனுய் சஞ்சரிக்கவில்லை. இவனுடன் இவனன்பனுன சுகுணன் இருந்தான். நேசரின் மகிழ்ச்சியே மகிழ்ச்சி! இவர்கள் தம்மெய் வருத்தம் பாரார், பசிநோக்கார், சினம் கொள்ளார், தீமை நினையார், எக்காலத்திலும் அன்புகுறையார், தம்முயிர்போல் நினைப்பார் தம் நண்பறை, இத்தகைய நேசமெனும் பந்தமட்டும் இல்லாவிட்டால் இவ்வுலகத்தில் சந்தோஷமென்பதேயிராது. சுகுணன் தன் சிநேகிதனின் துயரமடைந்த மனதிற்கு எவ்வளவோ ஆறுதல் சொல்லியும் பயன்படவில்லை, கடைசியாய்,

என் நண்பரே! தமது வருத்தத்தை என்னிடம் கூறலாகாதா? என்று கேட்டான்.

குண:— நீ யார், எவ்வுலகம். இங்கேன் வந்து என்னை பாதிக்கிருய்.

சுகு:— ஹா! இஃதென்ன? (தனக்குள்) ஏ கடவுளே! என் சினேகிதனுக்கு பயித்தியம் பிடித்துவிட்டதுபோலிருக்கிறது (வெளியிட்டு) அய்யா குண

14779
சென்னை-600 008.

சேகரரே! நான் தங்கள் சிநேகிதனல்லவா? சுகுணனன்றோ!

குண;— அப்பா சுகுண! நீயா என்னை மன்னிக்க வேண்டும். என் மனக்கலக்கத்தாலாரோ என்றெண்ணிவிட்டேன், நீ ஏன் சிரமப்படுகிறாய்? நாட்டிற்குச்சென்று சுகமாய் வாழ். இப்பாவியுடனிருந்தால் உனக்கும்தொலையாவறுமை வரும்.

சுகு:— உண்மையான நண்பர் தமக்கு நேரிடும் வருத்தத்தைப்பாரார். அன்றியும் தாங்கள் வியாகூலமுற்றிருக்கிறீர்கள். ஆகையால் உம்மை விட்டகலேன்.

குண;— உன் இஷ்டம், இனி என்னுடன் இருப்பதால் இதுவரையிலும் அடைந்த சந்தோஷம் கிடைக்காது.

சுகு:— இது வரையிலும் அடைந்த சுகத்திற்காவது நான் உங்களுடன் சிறிது கஷ்டப்படத்தயாராயிருக்கிறேன். ஆகையால் உங்கள் மனவருத்தத்தை என்னுடன் பங்கிட்டுக்கொள்ளலாம்.

குண:— அப்பா சுகுண! தெய்வம் என் விதியைமுழுவதும் குலைக்கவில்லை உன்போன்ற சிநேகிதனேனும் அடையும் பாக்கியம் நான் பெற்றிருக்கிறேன், உன்னுடன் கூறாத ரகசியமுமுண்டா?

சுகு:— அய்யா, உங்கள் அன்பை அவ்வளவுக்கு சம்பாதித்துக்கொண்டது, என் புண்ணியபலனே.

குண:— அது இருக்கட்டும்? உனக்குத்தெரியுமே!

அங்காதகி, மனோன்மணி, என்னை வஞ்சித்துவிட்டாள்.

சுகு.— யார, மனோன்மணியா! ஒருநாளுமிராது. எனக்கு நிச்சயம் தெரியும்.

குண:— நான் சொல்வது உண்மையே, இப்பாழும் கண்களால் நான் பார்த்தேன் அவ்வேசி மற்றொருவனைக்கட்டித்தழுவையில்.

சுகு:— எப்பொழுது? எங்கு? யாரை?

குண:— இரவு பத்தரைமணிக்கு, மேற்குமஹாலில், ஜெயசேகரனை,

சுகு:— இரவு பத்தரைமணிக்கு நீங்களங்கு போகக் காரணம்? நான் இப்படி கேட்கிறேனென்று கோபித்துக்கொள்ளக்கூடாது.

குண:— கோபமேனப்பா, நீ கேட்பது நியாயம் தான். நேற்று சாயந்திரம் நான் நந்தவனத்தில் உலாவிக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஜெயசேகரரைக்கண்டேன் நாங்கள் மாதரின் நடத்தையைப்பற்றிப் பேசினோம். அப்பொழுது அவர், மனோன்மணி எனக்கு வஞ்சகியென்றும் தன் மீது காதலுற்றவளென்றுங்கூறி, ஒரு கடிதத்தைக்காட்டினார். என் மனம் பதைத்தது, கோபம் மூண்டது, பழிவாங்க நினைத்தேன், ஆனல் பெண்ணென்று பொறுத்தேன்.

சுகு:— அக்கடிதத்தில்........

குண:— அவனை இரவு பத்தரைமணிக்கு........ நான் எப்படிச்சொல்லுவேன் என் நாவெழமாட்டேனென்கிறதே.

சுகு:— நீங்கள் ஒன்றும் சொல்லவேண்டாம் சற்றுப் பொறுத்து நாமிருவரும் யோசிப்போம். முதலில் ஜெயசேகரன் உங்களுடன் பெண்களைப்பற்றிப்பேசக்காரணம். (2-வது) அவன் அக்கடிதத்தைக் காட்டக்காரணம். (3-வது) ஜன்னலிற் றோன்றினவள் மனோன்மணிதானா? ஏன் மற்ற யாராகவாவது இருக்கக்கூடாது.

குண:— என்ன பித்தனைப்போல் பிதற்றுகிறாய், ஜெயசேகாருக்கு என்னிடம் என்ன விரோதம் நான் காதல் கொண்டிருப்பது நான் சொல்லும் வரையில் தெரியாது. அது போகட்டும். என்கண்களால் நானேபார்த்தேன், அக்குளரியை. இதைவிட அதிகமான ருசுவென்னவெண்டும்.

சுகு:— அய்யா! கலக்கமுற்றமனதிற்கு எதுவும் குற்றமாய்த்தான் தோன்றும். ஜெயசேகரனுக்கு நீங்கள் காதல்கொண்டிருக்கும் சமாசாரம் தெரிந்திருக்கவேண்டும். அதன்பேரில் அவன் பழிவாங்கும் எண்ணத்தோடு அக்கடிதம் காட்டியிருக்கவேண்டும். இல்லாவிடில் மனோன்மணி எப்படி பட்டவளானால் அவனுக்கென்ன. அதைப்பற்றி தான் உங்களிடத்தில் பேசுவானேன். இதுதவிர நீங்கள் கண்ட பெண் இராஜகுமாரிதானா என்று யோசிக்க வேண்டும். அவன் தங்களுக்கடங்காத் துயரம் விளைவிக்கக் கருதி, ஏன் தங்கள் காதலிபோன்ற அங்க உருவமுடைய ஒருமாதை, அங்கு தோன்றுமாறு செய்திருக்கக்கூடாது. ஏன் அந்தமாது இராஜகுமாரியின் ஆடையாப

ணங்களினல் அலங்கரித்திருக்கக்கூடாது. நீங்கள் பார்த்தபொழுதோ, இருட்டுவேளை. முகக்குறிகளை நன்ருய்க்கவனிக்க நியாயமில்லை. எனக்குத்தெரிந்தவரையிலும், அம்மாது அத்தகைய குணமுடையவளல்ல. இவைகளையெல்லாம் தாங்கள் சற்று கவனிக்கவேண்டும்.

குண:— நீ சொல்வது நியாயமாய்த்தானிருக்கிறது ஒரு வேளை அப்படியுமிருக்கலாம். ஆனல் ஜெபசேகரர், அக்கடிதம் எனக்குக்காட்ட அவசியமென்ன, நான் நோவதால் அவருக்கென்னபயன்

சுகு:—சரிதான் இது உங்களுக்குப் புலப்படவில்லையா ஜெயசேகரன் மனேன்மணியை மணம்புரிவதாக நிச்சயிக்கப்படவில்லையா அவன் பெண்டாள நினைத்த பெண்ணை, நீங்கள் காதலிக்கவில்லையா? இதுபோதாதா.

குண:— ஓ! ஹோ! நீ கூறுவது நியாயந்தான் நான் எவ்வளவு அவசரப்பட்டுவிட்டேன் நீ இப்பொழுதே நகரத்திற்குச்சென்று அங்கு நடக்கும் சமாசாரங்களையும் தெரிந்துகொண்டு எனக்குத் தக்க நல்ல ஆடைகளையும் எடுத்துவா, நாமிருவருஞ்சென்று இச்சமாசாரத்தை கவனிப்போம். போய்வா.

சுகு:— இப்பொழுதே போகிறேன், ஆனல் ஒரு கோரிக்கை அதாவது தாங்கள் நான் வரும்வரையில் இவ்வனத்திலேயேயிருக்கவேண்டும். செய்யத்தகாதகாரியம் ஒன்றும் செய்துவிடக் கூடாது.

குண:— செய்யத்தகாதகாரியம் ஒன்றும் நான் செய்

யேன். நீ அச்சப்படவேண்டாம் சீக்கிரம் போய்வா.

சுகுணனும் நாட்டை நோக்கிச்சென்றான். குண சேகரன் வனத்தில் உலாவிக்கொண்டிருந்தான்.

7-வது அத்தியாயம்.

“இன்றையதினம் இராஜன் மந்திராலோசனை செய்யப்போகிறார். மந்திரிகளும், மற்றுமுள்ள பிரபுக் களும், அச்சபைக்குச்செல்லவேண்டும். நானும் போக வேண்டும். நீ என்னுடன்வருவாய் நான் சொல்லுகிற படி செய்வாயா” என்று ஜெயசேகரன் தனது சிநே கிதனாகிய ஜெகந்நாதனை நோக்கிக்கேட்டான்.

ஜெக:— தங்களிஷ்டப்படி செய்யத்தயாராய் இருக்கி றேன்.

ஜெய:— அங்கு சபையில் சில சமாசாரங்களைச்சொல் லுவேன் நீ நான் சொல்வதுண்மை யென்றும் அதைச்சொல்ல மிக வருத்தப்பட்டவன் போல வும், நிஜம்கூறுவது அவசியமாகையால் நீஉரைப் பதுபோலவும் பாசாங்கு செய்ய வேண்டும். தெரிந்ததா.

ஜெக:— அப்படியே தங்களிஷ்டம்போல்.

ஜெய:— நீ பேசுவது உண்மைபோல் தோற்றவேண் டும். நீ பாசாங்கு செய்கிறாயென்று யாரும் நினை க்கக்கூடாது. என்ன?

ஜெக;— அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம் என்னிலும் பொய்யை மெய்போல் பேசுவதில் பாசாங்கு செய்பவர் ஒருவருமில்லை.

ஜேய:— சரி நீ சபைக்குவரத்தயாராயிரு, வண்டியை போடச்சொல் நான் சொன்னதை மறவாதே.

ஜேக:— "ஆகட்டும்" என்று சொல்லித்தான் ஏவப்பட்ட காரியங்களை கவனிக்கச்சென்றான்.

நீதிபுரியில் எத்தெருவைப்பார்த்தபோதிலும் உயர்ந்த ஜாதி துரகங்களாலும், கஜங்களாலும், இரதங்களாலும், சேவகர்களாலும், நிறைந்திருக்கிறது. இராஜவம்சத்தோரும், பிரபுக்களும், தனவான்களும், தங்கள் அந்தஸ்த்திற்குத் தக்க ஆடைகளைத் தரித்து வாகனங்களை ஏறிச்செல்லுகிறார்கள் இராஜ சபைக்கு நாமும் அங்குச்செல்லுவோம். இராஜ சபாமண்டபம் விசாலமானகூடம் இதில் ஓர் புறத்தில் உயர்ந்ததோர் மேடை நிர்மிக்கப்பட்டிருந்தது. உயர்ந்ததோர் இரத்தினக்கம்பளம் விரிக்கப்பட்டு, அதன்மேல் நவரத்தினகசிதமான ஓர் சிங்காசனம் சுவர்ணமயமான ஓர் மண்டபத்தின் கீழ் அமர்த்தப்பட்டிருந்தது. இராஜவம்சத்தார்க்காக சிங்காசனத்திற்கு பின் புறத்தில நாற்காலிகள் அமைக்கப்பட்டிருந்தன. காவலாளிகள் மாசற்ற ஆடையை யணிந்து வெள்ளிததடி, தங்கத்தடிகளை கரங்களிலேந்தி கவாடங்களைக்காத்திருந்தனர் சபையோர் ஒருவரின் பின் ஒருவர் வரலாயினர். சிறிது நாழிகைக்குள், சபைமுழுவதும், கூடிவிட்டது. ஜெயசேகரரும், வந்து சேர்ந்தார். அவருடன் ஜெகன்னாதனும் வந்திருந்தான். எல்லோரும் அரசனின் வரவை எதிர்பார்த்திருந்தார்கள். கூட்டங்கூட்டமாய் நின்று சிநேகிதர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். இவர்களைப்பார்க்கையில் உபாத்தியாயர் வருவதற்குமுன் பள்ளிக்கூடத்திலிருக்கும் மாணவர் போலிருந்தது.

பரிஹாசமும், சந்தோஷமும், எங்கும் நிறைந் திருந் தது. இச்சமயத்தில் ஒரு தூதன் விரைவாய் வந்து இராஜாதிராஜன் வருகிறுரென்று உரத்துக்கூவினுன். உடனே எல்லோரும் தங்கள் சம்பாஷணையை நிறுத்தி விட்டுத்தம் தம் இடத்தில் உட்கார்ந்தனர் கம்பீரமாய் ஜெயபேரிகை, அடிக்கப்பட்டது. ஆராய்ச்சி மணி டாங், என்றடித்தது. அரசரும், தம் குமரியுடன் உள்ளே பிரவேசித்தனர். எல்லோரும் எழுந்து வணங் கினுர்கள், "ஜெயீபவா; விஜயீபவா" எனும் ஆசிர்வ சனம் பிரதிதுவனித்தது. இந்த உத்ஸாகத்துடன் அர சர் தம் மகளுடன் சென்று சிங்காசனத்திலமர்ந்த னர் இராஜதூதன் கூடத்தினின்று அரசர் பேசப்போகிருர். ஒருவரும் சப்தம் செய்யக்கூடாது என்றுன். சபைமுழுவதும் நிச்சப்தமாயிருந்தது. அப்பொழுது அரசர் "நம்புரவாசிகளே, பிரபுக்களே, சிற்றரசர் களே, நாம் எல்லோரும் இன்று இங்கு ஒன்றுகூடின காரணம் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அதாவது நமதேகபுத்திரியாகிய இம்மனேன்மணியைப் பற்றித் தான். நம் சமானரான பிரீதிபுரத்தரசர் நம்மகளின் கரத்தைநாடி தூதனுப்பியிருந்தார். நாம் அதற்கு சம்மதியாததின்மேல் சினங்கொண்டு நம்நாட்டின் மீதுபடையெடுத்துவருவதாகத்தூதனுப்பியிருக்கிருர். நாமதற்குச்சம்மதித்து தகுந்தவாறு பதில் சொல்லி அனுப்பவேண்டும். அப்படி நாம் செய்யத்தயாராய் இருக்கும் யுத்தத்திற்கு நாமேபோவது முடியாததால் நம் தங்கையின் புதல்வரான ஜெயசேகரரை நியமிப்ப தாய்த்தீர்மானித்து உங்கள் சம்மதம்பெற இங்கு இச் சபையைக்கூட்டினேம்" என்ற இம்மொழிகளைச்

சொன்னார். உடனே எல்லோரும் ஓரே குரலில், சரி, அதுதான் சரி என்றனர். ஜெயசேகரரும் தாம்பெற்ற மரியாதைக்காக வந்தனம் செய்ய, அரசர் வீற்றிருந்த மேடையின் மீதேறிப்பின் வருமாறு பிரசங்கம் செய்தார்.

" அரசே தங்கள் செங்கோலிற் குட்பட்ட பேதையாம் இவனுடைய நன்றியறிவின் அடையாளமாகிய வந்தனங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும். நண்பர்களே, தேசவாசிகளே, நீங்களனைவரும் ஒன்றுய்க் கூடி எனக்களித்த மரியாதைக்கு நான் என்றும் நன்றியறிவுடன் இருக்கக்கடமைப்பட்டவன். நமக்கு மாதாபிதாவைப்போன்ற இத்தேசாதிபதியின் அரசாட்சியில் நாம்பெருத சுகமொன்றுமில்லை என்றே சொல்லலாம். ஜார, சோர, ஜூதமெனும் நாகரீகத்திற்கு கேடுவிளைவிக்கும் இம்முக்கேடுகளையும் கண்டிக்கவேண்டிய நியாயங்கள் வரையப்பட்டிருக்கின்றன. சிறப்புப்பெற்ற அரசாட்சி யுடைய, நாடிதுவே யென்று சொல்லலாம் ஆயினும் நம் நாட்டிலும், இன்னும்சில அகாரியங்கள் நடந்துவருகின்றன. முதலில் உள்ளை சுத்தப்படுத்திக்கொண்டு பிறகு புறத்தை சுத்தம்செய்யப்பிரயத்தினப்படவேண்டும். நாட்டினுள் நாசகரமானகாரியங்கள் நடந்துவர நாம்வெளி நாட்டரசனைவெல்லச்செல்வதில் யாதுபயன், ஆகாதகாரியங்கள் பிரஜைகள் செய்தால் குற்றம். அதிலும் இராஜ வம்சத்தார் செய்தால் கேட்பானேன். நான் இப்போழுது சொல்லப்போகிறது அதோ உட்கார்ந்திருக்கிறரே ஜெகந்நாதர் அவருக்கும் இந்தப்பாவி கண்ணிற்கும் புலப்பட்டது.

அர:—ஜெயசேகரா! இவ்வளவு பீடிகையேன்? நடந்ததென்ன, சொல்.

ஜேய:— அதுதான் சொல்லப்போகிறேன். உங்களுக்குமிகவருத்தம் கொடுக்கலாம். ஆயினும் தேவாலயத்திலும், அரசர்முன்னும், மஹாஜனசபையிலும், குழந்தைகளிடத்திலும், உண்மையே கூறவேண்டும். ஆதலால் இச்சமாசாரம் என்மனதிற்கு சந்தோஷம் தராவிடினும், தேசநன்மையை உத்தேசித்து நான் சொல்லவேண்டியிருக்கிறது,

அர:—தேசநீதியைப்பற்றினவரையிலும்,என பெண் ஆயினும் குற்றவாளியைத்தண்டிக்கவேண்டியதுதான். அறிந்தோர்களாகிய, நாமே, பிழைசெய்தால், பாமரஜனங்கள் செய்யக்கேட்பானேன்

ஜேய:— தாங்கள் நீதிதவறாத மன்னரென்பதற்கும் சந்தேகமா? ஆயினும் விருத்தாப்பியரான தங்கள் மனதை நோகச்செய்ய, என்மனம் இசையாது.

அர:— நியாயத்தைப்பற்றின வரையிலும் எவ்வருத்தத்தையும் உட்கொள்ளேன்,

ஜேய:—நேற்று இரவு $10\frac{1}{2}$ மணிக்கு நான் மேல்புறத்தில் அரண்மனையைச் சார்ந்த நந்தவனத்தில் உலாவிக்கொண்டிருந்தேன். எனக்கு நித்திரைவரவில்லை. நான் இன்று நடக்கும் மந்திராலோசனையைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்தேன். அச்சமயம், மூன்றும் உப்பரிகையின் ஜன்னல் கதவு திறக்கப்பட்டது. உடனே ஒரு புருஷன் மரத்

தின் நிழலிலிருந்து வெளிப்பட்டான். ஏதோ விசேஷமிருக்குமென்றெண்ணி நான் மறைவிலிருந்தேன். அங்கு தோன்றினவனை உற்றுப்பார்த்தேன். அவன் மெல்லென ஒருதரம் கனைத்தான் உடனே ஓர் நூலேணிதாழ்த்தப்பட்டது. உப்பரிகையில் ஒருமாது தோன்றினாள். அம்மாதையும் கவனித்தேன் அவளும்......

அர:— யார்? மனோன்மணியா! அத்தகைய குற்றம் செய்தவள். என்ன ஜெயசேகரா! யோசித்துப் பார்த்துச்சொல்.

ஜெய:— நான் யோசித்து என்னபயன்? நான் ஒருவன் மட்டும் கண்டிருந்தால் யோசித்து யார் பேரிலாவது பழி போட்டிருப்பேன்.

மனோ:— ஹா! நானா! நேற்றிரவா, ஹே கடவுளே நான் என்னசெய்வேன். ஐயோ! பாதகா, சண்டாளா, குலத்துரோகி, இப்பழிஎன்பேரில் சாட்ட எத்தனை நாளாய், நினைத்திருந்தாய், ஹே பூமாதேவியே, உன்னில் என்னை சேர்த்துக்கொள்ளலாகாதா?

என்ற நொந்த மொழிகளுடன் மூர்ச்சையாய் விட்டாள் அரசனும் இடிகொண்ட சவம்போல் மதிகலங்கி யொன்றுங்கூறாமல் தன் மகளையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான் எல்லோரும் பிரமையும் துக்கத்தையும், தங்கள் முகக்குறிகளால் காட்டினர்கள். வந்திருந்த சபையோரில் விருத்தாப்பியர் இது அபவாதமென்று பேசிக்கொண்டார், சிலர் இராஜகன்னிகையைப்பார்த்து‘ இவளும் இவ்வாறுசெய்யத்தக்கவளா ’ என்றார்கள்.

சபையில் அபிப்பிராயபேதம் உண்டாயினது. ஒருவர் ஜெகந்நாதரைப்பார்த்து ஐயா இச்சமாசாரத்தைப்பற்றி உமக்கென்ன தெரியும் என்றார். எல்லோரும் அவ்விருந்த திக்கைநோக்கினார்கள். அவரும் தாம் மிகவும் வருத்தம்கொண்டவர்போலவும், இதில் உரைக்கவேண்டுமேயென்று சிந்திப்பவர் போலவும், ஐயா அதைப்பற்றி என்னைக்கேட்கிறீர்கள். அந்தப்பாவத்தை தர்க்கிக்கவும்வேண்டுமா? என்னமோ தலையில் எழுதினது ஆரைத்தான்விட்டது. ஏதோ? பூர்வஜென்ம கர்மபலன் என்ன செய்கிறது.

பிரபு:— இந்தச் சமாசாரமெல்லாம் எதற்கு. நடந்ததென்ன சொல்லும்.

ஜெக:—தாங்கள் நிரம்ப ஆவலுடன் கேட்கிறீர்களே! நான் இந்தமாதிரி சமாசாரங்களைப் பற்றிப்பேசுவதில்லை. நீங்களெல்லாரும் கேட்பதின் பேரில் சொல்லுகிறேன். ஹே, ஜெகதீசா! அடியேன் சொல்வது பிழையாயிருந்தபோதிலும் காப்பாற்றவேண்டும். இப்படிப்பட்ட சமாசாரங்கள்நான் கண்ணால் கண்டபோதிலும், வெளியிடுவதில்லை. இந்தச்சமாசாரம் ஜெயசேகரையும், சொல்லவேண்டாமென்று கேட்டுக்கொண்டேன் அவர் தேசாபிமானத்தில் அதை மறந்துவிட்டார். என்னா செய்கிறது. இதைப்பற்றிப்பேச எனக்கிஷ்டமில்லை.

பிரபு:— தாங்கள் நல்ல உத்தமரென்று எங்களுக்குத் தெரியும் நடந்தது சபைக்குத்தெரியவேண்டும் அரசர் குமாரியாயிருந்த போதிலும் உண்மை.

வெளிப்படவேண்டும். நியாயத்திற்கு இனம் குலம் ஸ்திதி வித்தியாசம் கிடையாது. ஆகையால் தாமதஞ்செய்யாமல் நடந்ததைச் சொல்லுங்கள்.

ஜெக:—ஆஹா! அப்படியேசெய்கிறேன் ஜெயசேகரர் சொன்னபடிநேற்றிரவுநான் அவரைத்தேடிச்சென்றேன். அப்பொழுது சுமார் பத்தரைமணியிருக்கும் மேல் மஹாலின்மூன்றாவது உப்பரிக்கையின் ஜன்னல் திறக்கப்பட்டது. நூலேணிதாழ்த்தப்பட்டது. உடனே யாரோ புமான் ஒருவன் மரத்தின் நிழலிலிருந்துவெளியே வந்தான். இந்தப்பாவத்தை நான் பார்ப்பானேனென்று எண்ணி விடு செல்லத்திரும்பினேன். அப்பொழுது ஓர்மரத்தடியில் ஜெயசேகரரைக் கண்டேன் அவர் எனக்கு ஜாடை காட்டினார். அவ்விடஞ்சென்று, நானும் பார்த்துக்கொண்டிருந்தேன் அப்பொழுதுஒரு மங்கை மேலேதோன்றினாள் விளக்கின் ஒளியில் அம்மாது கிரீடம் வகித்திருந்ததாலும் தரித்திருந்தஆடையும் சிமாட்டிகள் அணியும் ஆடையாயிருந்ததாலும் ஒருவேளை இராஜகுமாரியாயிருக்குமோவென்று ஊகித்தேன். நான் சொன்னதை ஒருவாக்குமூலமாய்க்கொண்டு இம்மங்கையரை ஓர்விதத் தண்டனைக்கும் சபையோர் உட்படுத்தார்களென்று எண்ணுகிறேன் ஏதோ, சிறுவயது மங்கையருக்கு பருவப்பிராயம்வந்தவுடன் அவர்களுக்கு தக்கமணாளனைத்தேடி விவாஹம் செய்யாதிருப்பது பிதாக்களின் குற்றமாயிருக்க இம்மங்கை வயதுக்குரிய ஆசையால் மோசம்போய் செய்யும் இத்தகைய பிசகுகளைக்கண்டிப்பதில் என்ன பயன்? என்ற இம்மொழிகளை வெகு சமாதானமான மனதுடன் விளம்பினான். விபசாரமென்பது சக

ஐம்போலவும் தான் தினம் ஸ்நானக்கணக்காய் இதைப் பற்றி கேட்டவன் போலவும் அலட்சியமாய்ப் பேசி ஞன். இவன் முகத்தில் வெட்கமென்பது தோன்றவி ல்லை இப்படியும் சிலர் இப்பிரபஞ்சத்திலிருக்கிறார்கள் இயர்கள் பிறந்ததே உலகத்தில் தீங்கு விளைவிக்க, இவர் களின் பேரானந்தம் அன்னியரின் துன்பமே. இதரா களின் துக்கமே இவர்களின் சுகம் கொடுமையென் பது இவர்களின் உருவமாக வந்து தேசத்தில் வழங் குகின்றது இவன் சொன்ன வார்த்தைகள் சபையை யே மவுனமாக்கிவிட்டது. ஒருவர் முகத்தை யொரு வர் பார்த்தார்கள் அரசரும் அறிவுதெளிந்து விழித் தெழுந்தவர் போல் நாற்புறமும் சுற்றிப்பார்த்து ஏ! கடவுளே! நான் என்ன செய்வேன். இத்தகையபெண் ணை எனக்கேன் கொடுத்தாய்! நான் பட்ட கஷ்டங்கள் போதாதென்று இதையும் விளைவித்தனே? இப்பெண் ணால் எனக்குண்டான அபவாதத்துடன் நான் ஜிவித் துமிருக்கவேண்டுமா! நல்லமரத்தில் புல்லுருவி செனி த்ததுபோல் இவள் எனக்கு பிறக்கவேண்டுமோ! ஈசா! இதுவும் உன்செயல்! என்னால் தடுக்க முடியுமா? பல மில்லாத நான் என்ன செய்யப்போகிறேன். ஜெயசே கரா! நீசொல்வது உண்மைதானா? ஓர் பெண்ணின் கற்பிற் கபவாதமும் என் குலத்திற்கோர் அகௌரவ மும் என் மனதிற்கு துக்கமும விளைவிக்க வேண்டு மென்பது உன் சங்கல்பமோ?

ஜெய:— அரசே! உங்களை மதியில் சிறந்தவரென்றும் மனிதரின்குணத்தை அறியக்கூடியவல்லமையுடை யவரென்றும், எண்ணியிருந்தேன். உங்கள்மனதிற் கு வருத்தமுண்டாக்குவதில் எனக்கென்ன பயன்.

ஜெக:—நாராயணா! நாங்கள் ஒரு நாளும் வீண்மொழி கள் சொல்லமாட்டோம். கோஹத்தி, சிசுஹத்தி, ஸ்திரீஹத்தி, பிரம்மஹத்தி, இவைகள் எல்லா வற்றையும் விட மிகவும் பாதகமானது பொய் புகலுதல் என்னபாவம் செய்தோ இந்தஜன்மம் எடுத்தோம் நம வாழ்நாட்களில் எல்லோருக்கும் நன்மைசெய்து ஜீவகாருண்ய மெனும் நற்குணம் மேலான தேவனது பாதங்களில் மனதை நாட்டி நல்வழிபெற முயலாமல் வீண்மொழிகள் பேசிப் பிறருக்கு ஹிம்ஸை செய்வதே விருதுழாய்க் கொள்வதில் என்ன பயன்.

சபையோர்களில் ஒருவர், ஜெகநாதர் சொல் வது உண்மையே அவர்களுக்கு வீண்மொழி சொல் வதில் என்னபயன். அஃதிருக்கட்டும் இந்த சமாசா ரத்தைப்பற்றிப்பேசுவது அரசருக்கு வருத்தத்தை தருமாயினும் நாட்டின க்ஷேமத்தை கவனிக்கையில் அவசியமாயிருக்கிறது. ஆகையால் ஜெயசேகரரே! தாங்கள் இச்சபையோருக்குச்சிலசந்தேகங்கள் தீர்த்து வைக்கவேண்டும்.. முதலில் நீங்கள் பார்த்த புருஷன யார் என்றார்.

ஜெய:—எக்கேள்விக்கும்பதில் சொல்லத் தயாராயிருக் கிறேன். நான பார்த்த பூமான் குணசேகரரே.

பிரபு:— யார் குணசேகரரா! நீங்கள் இரண்டு பேர்க ளாயிருந்தீர்களே உடனே ஏன் அவரைக் கைப் பற்றியிருக்கக்கூடாது.

ஜெய:—நாங்கள் அவரைப்பிடித்தோம். உடனே அவர் தம் உடைவாளை உருவி எங்களைக் குத்தவந்தார்.

நான் வாள்கொண்ட கரத்தைப் பிடித்துக்கொண்டேன் அவர் திமிறிக்கொண்டு ஓடிவிட்டார். அப்பொழுது அவர் கத்தி பாதியாய் முறிந்துவிட்டது இதோ இருக்கிறது பாருங்கள் இது போதாதென்றால் அவர் இன்றையதினம் சபைக்கும் வரவில்லை அதுவுமன்றி அவர் நாட்டிலும் இல்லையென்று தெரியவருகிறது.

பிரபு?—ஆம் அது உண்மைதான் சபையோர்களே நாம் வஞ்சனையில்லாமல் இவ்விஷயத்தில் நியாயமுரைக்கவேண்டும். நீங்கள் மனசாட்சிக்கு விரோதமின்றி உங்கள் எண்ணங்களை உரைக்கவேண்டும்.

சபையோர், சிறிது நாழிகை யோசித்து “ இப்பொழுது சமாசாரம் வெளியானவரையிலும், அங்கு வீற்றிருக்கும் அம்மாது மனோன்மணி குற்றவாளியாகத்தான் புலப்படுகிறாள் மங்கையர் அந்நிய புருஷருடன் விவாஹமில்லாமல் ஏதேனும் உறவாடியிருந்தால் அம்மங்கையர்க்குள்ள தண்டனையை இம்மாது அடையவேண்டியவளாய்த்தான் தோன்றுகிறது” என்றார்கள் இம்மாதிரி தீர்மானிக்கப்பட்டபோது இராஜகுமாரியும் மூர்ச்சைதெளிந்து சுற்றிப்பார்த்து தான் ஏதோ கனவுகண்டவள்போல் தயங்கினாள். ஆனால் சபையோர்கள் சொன்ன கடைசி மொழிகள் இவள் நினைவிற்கு நடந்த சமாசாரமுழுவதையும் தெரிவித்தன. தான் குற்றம் சாட்டப்பட்டவளென்று தெரிந்துகொண்டாள் உடனே தந்தையின் அருகாமையிலிருந்து விலகினாள், பெண் தன் நோக்கத்தைத்தரையில் நாட்டினாள் அப்பொழுது சபையோர்களிலொருவர் இராஜ புத்திரியை நோக்கி

"பெண்ணே! நீ ஜெயசேகரால் விபசாரி என்று தோஷம் சாற்றப்பெற்று சபையோர்களால் அம்மா திரியே தீர்மானிக்கப்பட்டிருக்கிறாய் ஆகையால் நம் நாட்டரசாட்சியால் அக்குற்றத்திற்காக நியமிக்கப்பட்ட தண்டனைக்கு நீ ஆளாகிறாய் அதாவது இன்று முதல் 3. நாள் வரையிலும் நின்பேரில் குற்றம் சாற்றினவர் நீ. ஜாரஸ்திரீயென்றும் அப்படியல்லவென்று எதிர்த்து சொல்வோருடன் தான் யுத்தம்செய்துவெற்றியடைய தயாராயிருப்பதாயும் பறையடித்து நாடு முழுவதும் தெரிவித்து அந்தயுத்தத்தில் எதிர்ப்பவன் தோற்பானாகில் நீ சிரச்சேதம் செய்யப்படுவாயென்ற இதுதான் நம்முடைய நீதிபுரத்தில் கற்பிழந்த ஸ்திரீகளுக்காக வரையப்பட்ட நீதி இம்மூன்றுநாளும் நீ சிறையிலிருக்கவேண்டியவள்" என்ற நியாயத்தைஎடுத்துரைத்தான். அரசர் ஒன்றும்சொல்லவில்லை என் சொல்லுவார், பரிதாபம். தாம் நினைத்த தொன்றிருக்க நடந்ததொன்று; சபைகலைய உத்திரவாகிவிட்டது. காவலாளிகள் மனோன்மணியை சிறைச்சாலைக்கழைத்து சென்றனர். கருணாகரரும் மனவருத்தத்தைத்துணைக்கொண்டு அரண்மனைக்கேகினார்.

8-வது அத்தியாயம்.

"அஸ்தமிக்கப்போகிறது இன்னும் சுகுணன் வரக்காணேன். நாட்டில் நான் வந்துவிட்டதைப்பற்றியார் இகழ்ந்து பேசுகிறார்களோ. ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு என்பதெனக்கேயுற்றது சிறிதும் யோசியாமல் நான் இங்கு வந்துவிட்டேன் சுகுணன் எப்போது வருவானென்று நான் பாதையில் நின்று பார்பேன்" என் று எண்ணிக்கொண்டு காட்டின் நடுவேசெல

னும்பாதையை நோக்கிச்சென்றான். மஞ்சள்வெயிலில் செடிகளெல்லாம் வெகு அழகாய்த்தோன்றின. காட்டு ரோஜா, மல்லிகை, சம்பங்கி, முதலிய புஷ்பங்கள் விக சித்து வாசனை எங்கும் வீசியது. அணில்கள் முயல் கள் முதலிய சிறு மிருகங்கள் வெய்யிலில் விளையாடிக் கொண்டிருந்தன இச்சமயத்தில் சிறுமியாம் ஒருமாது ஓர் குதிரையின் மீதேறி அதி சந்தோஷமான முகத் துடன் மெல்லென சவாரி செய்துவந்தாள் அவள் இரு புறத்திலும் இரு புருஷர்கள் பேசிக்கொண்டு வந்தார் கள். இவர்களிலொருவன் தன் சிநேகிதனைப்பார்த்து " ஏன் வில்லா, செய்யவேண்டிய காரியத்தை செய்ய லாமல்ல" என்றான்.

வில்:— அடே! நீ என்னப்பா சும்மா தொந்திரவு படு த்துரே. அந்தக்குட்டியைப்பாக்கச்சே எனக்கு இட் டம்வர மாட்டேங்குதே.

வீர:— நீ சொல்ரது சரிதான் ஆனுக்கே எசமான் நம க்கு வவுறு நிறைய கள்ளும், கை கிறயத்துட்டும், கொடுக்கிறேன் என்னுங்களே? அதுமட்டும் சும்மா கிடைக்குமோ.

வில்:— அடே போடா எங்கேயாவது திருடினுக்க போச்சு அதுதானு பிரமாதம் இந்தக்குட்டியையும் கூட்டிட்டுக்கிட்டு போகலாம். பொல்லா எசமானே கண்டே.

வீர:— அப்பா! அப்படி செய்யக்கூடாது. எசமான் கண்டுட்டா ரொம்பகஷ்டம்வரும் ஒனக்கென்ன. நீ எங்கேயாவது ஓடிப்போய்ப்பொளச்சிடுவே அப்பா நம்மாலே அது முடியாது.

வில்;— ஆறு, நீயே இந்தக்குட்டியை கொண்ணிடு நாமாட்டேன் எனக்கிஷ்டமில்லே.

பேண்:— ஏண்டா ஜெயசேகரரின் நந்தவனம் இன்னம் எவ்வளவு தூரம, அஸ்தமித்துவிட்டது சீக்கிரம் நாம்போகவேண்டும் வஸந்தமேடைக்கு.

வீர:— அப்பா! வஸந்த மேடையா! நோக்கு இந்தான் வசந்த மேடை.

பேண்:—என்னடா துஷ்டா என்னைக்கேலி செய்கிறாய்

வீர:—பின்னே எஜமானுக்கு மேடையேது? உன்னைக் குத்தி கொல்லச்சொல்லியல்லா எங்களோடு அனுப்பியிருக்காரு.

பேண்:—ஆ! என்ன சொன்னாய் நான் யார் தெரியுமா ஜெயசேகரரின் காதலி. ஜாக்கிரதையாய்ப்பேசு அய்யாவோடு சொல்லி நல்ல உதைவாங்கி வைப்பேன்.

வீர:— ஆயாடி நீ காதலியானு எங்களுக்கென்ன வயலெலியானால் எங்களுக்கென்ன உன்னைதான் சுண்டெலி நசுக்குராப்போலே நசுக்கிவிடச் சொல்லி உத்திரவு கொடுத்திருக்குறாங்கோ.

வில்:—அவன் சொல்ரது சரித்தா. இதோபாரு காயிதம் எசமான் எயிதி கொடுத்திருக்காங்கோ.

பேண்:— (கடிதம் பார்த்து) அய்யோ? நான் மோசம்போனேன் இப்பாதகனின் இனிய வஞ்சகமொழிகளை உண்மையென்றெண்ணி வீணானேன் அப்பா, அடே, உங்களைத்தாண்டா, உங்களுக்கு வந்தனம் செய்கிறேன் நான் போட்டிருக்கும் ஆபாண

ங்களனைத்தையும் தருகிறேன். என்னை உயிருடன் விட்டுவிடுங்கள். நான் எங்கேனும்சென்று உயிர் வளர்க்கிறேன். என்னை விட்டு விடுங்கள்.

வீ:—ஏ ஆத்தா! நகையெல்லாம் நீ கொடுக்கணுமோ! நீ செத்தாக்கே நாங்களே எடுத்துகிறோம். நீ கொடுக்கணுமோ ;குதிரையைவிட்டிறங்கு,உன்னைக்கொலைப்போறேன் ” என்று சொல்லிப் பிச்சாங்கத்தியை உருவி அந்தப்பெண்ணையும் குதிரையிலிருந்து இழுத்துவிட்டான்.

பெண்:—ஐயோ, என்னைவிடமாட்டீர்களா? நான்உங்களுக்கு ஒருதீங்கும் செய்யவில்லையே; ஐயோ! குத்தவருகிறனே, இந்த வனத்தில் யாரும் எனக்கு உதவுவாரில்லையா. ஐயோ! குத்தவருகிறனே” என்று உரக்கக்கதறினாள். இச்சப்தம்கேட்டு குணசேகரன் வெகு வேகமாய் அங்கு வந்தான். இவன் சமீபத்தில் வருவதற்கு முன் வீரன் அவளை கத்தியால் மார்பினில் குத்தினான். “ ஐயோ நான் சாகிறேன், சாகிறேன். எனக்கு கதி ஒருவருமில்லையா ” என்ற வார்த்தைகளுடன் கீழே விழுந்தாள். குணசேகரனும் அவள் அருகாமையில் வந்து அவளை உற்றுப்பார்த்தான். அதற்குள் கொலையாளிகள் ஓடிவிட்டனர். குணசேகரன் கீழே விழுந்திருந்த அப்பெண்ணைப்பார்த்து “ ஹா! இவள் யார் எங்கேயோ பார்த்திருக்கிறேன்; தன் புருஷனுக்கு வஞ்சனை செய்ததற்காக இவள் கணவன் இவளை கொன்றுவிடும்படி இங்கு அனுப்பினனோ, என்னமோ? இவள் மூர்ச்சையாயிருக்கிறாள் ஆரையாவது உதவிக்கழைத்து வருகிறேன. அதோ தெரிகிற குடிசையில் யாராவது இருப்பார்களோ நான போய்

அழைத்து பார்க்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு குடிசைக்கு ஓடி அதிவிரைவாய் கதவைத்தட்டினான் "ஆரங்கே இருட்டுவேளையில் இங்கே இடமில்லை" என்ற மொழிகள் கேட்டன.

குண:—நான் இடம் கேட்கவில்லை, இங்கு ஒருபெண் சாகக்கிடக்கிறாள். நீ உதவுவாயானால் உனக்கு வேண்டுமட்டும் பொருள் தருகிறேன். சீக்கிரம் வா" என்றான். உடனே கவாடத்தை திறந்துகொண்டு ஒரு குடியானவன் வெளியில் வந்தான். இருவரும் விழுந்துகிடக்கும் பெண்ணிடம் வந்தார்கள். அவளும் மூர்ச்சை தெளிந்து விழித்துப்பார்த்து "ஹா குணசேகரரே நீங்களா! இங்கு குத்தியிருக்கும் கத்தியை பிடுங்கிவிடுங்கள். ஐயோ! மெள்ள, மெள்ள" என்றாள்.

குண;—யார! சித்திரரேகா! நீ இங்கு இவர்களுடன் வரக்காரணமென்ன! ஏன் அரண்மனையை விட்டு வந்தாய்?

சித்:— ஐயோ நான் ஒருபாதகி; உமக்கு பெரும் தீங்கை விளைவித்தவள்; நான் செய்தபாவத்திற்குதக்க தண்டனை கடவுள் எனக்கு விதித்தார். நான் சாகப்போகிறவள் என்னை மன்னிப்பீர்களாக.

குண:— நீ ஒன்றும் தீங்கு எனக்கு செய்யவில்லையே நான் உன்னை எதற்கு மன்னிப்பது.

சித்;—நான் செய்த கேட்டை சொன்னால் என் முகத்தில் விழிக்கமாட்டீர்கள். ஆயினும் நான் செய்ததை உங்களுடன் சொல்கிறேன்.

குண:— அ தெ ன் ன?

சித்:— ஜெயசேகரரின் மாயவலையில் சிக்கி நான் மதி யற்றவளாய் மூன்றாம் நாளிரவு மனோன்மணியைப் போல் வேடம்பூண்டு உங்களை வஞ்சித்தேன்.

குண:— அப்படியா! ஆனால் ஜன்னலில் தோன்றிய வள் மனோன்மணியல்லவா?

சித்:— அல்ல; அவள் யாதும் அறியாத பேதை. ஜெய சேகரன், அவள், தன்னை அவமதித்ததற்காக அவ ளைத்தண்டிக்கக்கருதி உங்களை காட்டிவிருந்து தூர த்த இந்த எத்தனம் செய்தான். அக்கிராதகனின் வார்த்தைகளுக்கிணங்கி மோசம்போனேன்.

குண:—ஐயோ,நான் அவளை வஞ்சகியென்றல்லவோ நினைத்தேன். ஆனால் ஜெயசேகரனை அவள் ஆலிங் கனம் செய்யவில்லையா?

சித்:—இல்லை மானினி சுகமாய் நித்திரையிலிருந்தாள். நான் அவள் கிரீடத்தைத்திருடினேன்; ஆடைகளை யும் திருடினேன்; அவள் ஒரு குற்றமும் செய்ய வில்லை.

குண;— ஹா, ஜெகதீசா! நான் மஹா சண்டாளன். அவள் மேல் வீண் சந்தேகம் கொண்டேன். என் உண்மைக்காதலியை அவமதித்தேன், நான் இருந் தென்ன இறந்தென்ன. இங்கே என் பிராணனை இவ்வாளிற்கிரையாக்கி விடுவேன். (கத்தியை ஓங் குகிறான்)

சித்:— குணசேகரரே நீங்கள் இறப்பதால் யாருக்கும் பயன் ஒன்றுமில்லை. அநியாயமாய் மனோன்மணி சிர ச்சேதம் செய்யப்படப்போகிறாள். நீங்கள்இப்பொழு

தேசென்றால் அவளைக்காப்பாற்றலாம். ஜெயசேகரன் அவள் சோரம்போனவளென்று குற்றம் சாற்றியிருக்கிறான். ஆகையால் உடனே நீதி புரிக்குச்செல்லுங்கள். அப்பாதகனுடன் போர்செய்து அவனை வதை செய்யுங்கள். என்னைப்பற்றி கவலைப்படவேண்டாம்; என் காலம் முடிந்துவிட்டது, நான் சாகப்போகிறேன். என்னை மன்னிப்பீர்களா? என்னால் உரக்கப்பேச முடியவில்லை. இந்தக்கடிதமும் எடுத்துச்செல்லுங்கள் என்னை கொல்லக்கொடுத்த அதிகாரப்பத்திரம். "என்று சொல்லி கண் மூடினான், சிறிது நேரத்திற்கெல்லாம் ஜீவன் இவனை விட்டகன்றது.

9-வது அத்தியாயம்.

"படமுடியா தினித்துயரம், படமுடியா தரசே, பட்டதெல்லாம் போதும், இந்தப்பயந்தாந்த இப்பொழுதென உடல்வுயிராதியவெல்லாய் நீஎடுத்துக்கொண்டுன்னுடலுயிராதியவெல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய் வடலுறு சிற்றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுள் மணியே, என் குருமணியே, மாணிக்கமணியே, நடன சிக மணியே, என்கவமணியே, ஞானநன்மணியே, பொன்மணியே, நடராஜ மணியே, "என்ற அருட்பாவை மன உருக்கத்துடன் பாடிக்கொண்டு வீற்றிருந்தாள் மங்கை மனோன்மணி. செங்கோலேந்தி அரசாளும் சீமாட்டிக்கும் சிறைச்சாலை சம்பவித்தது. இரண்டு நாட்களில் மங்கையின் முகம்யாறிவிட்டது. கங்கையா பட்டபாடு நாம் சொல்லமுடியாது. நொந்தாள் தன் தலைவிதியை நினைத்து மாங்கி, சிறிது நாழிகை தூக்கிப்பாள், பின்மனம் தேற்றிக்கொள்ளுவாள். கருங்குழலாள், ஆஹார விஹார நித்திரை யற்றவளாய்

ஓர் முருட்டுக்கட்டிலில் போடப்பட்டிருந்த வைக்கோல் மெத்தையில் உட்கார்ந்திருந்தாள். துயரமடைந்து சோகையிளைக்கான கருணாகரர் வந்தார். இவ்விரண்டு நாட்களில் அங்கம் தளர்ந்து உடல் வளைந்து தள்ளாத தொண்ணூறு வயதுக்கிழவரைப்போல் தோன்றினார் வந்தவர் கண்களில் தாரை தாரையாக கண்ணீர் பெருகினது. தம் மகளைக்கட்டி முத்தமிட்டார் கிழவர் அடங்காத்துக்கத்துடன் தன் தந்தையின் கண்களைத் துடைத்து "என் செல்வத்தந்தையே, துக்கப்படவேடாம் என் தலைவிதிக்கு நீங்கள் வருத்தமடைவதில் என்னபயன். இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றெழுதிவிட்ட சிவனும் செத்துவிட்டானோ, முட்ட முட்டப் பஞ்சமேயானாலும் பாரமவனுக்கன்னாய் நெஞ்சமே யஞ்சாதே நீ" என்றபடி முட்ட முட்டப் பஞ்சமேயானாலும் பாரமவனுக்கேயாம். நீங்கள்வீணா கவிசனப்படவேண்டாம்" என்றாள் மனோன்மணி.

கரு:- என் அருமைச்செல்வமே, நீ என் ஒரே புத்திரியாயிருந்தும இச்செங்கோலுக்கு உடையவளாயிருந்தும் உனக்கு இக்கதி வந்ததேயென்று நினைக்க என்மனம் பதறுகிறது.

மனோ:— அப்பா, நான் யாராயிருந்தாலும் என் விதி மாறுது. மூடராம்மாநிடர் தம் கஷ்டத்தை நினைத்து வருத்த மடைவார்கள் வருவது வந்தே தீரும் அதற்கு துக்கித்து என்ன பயன்.

சகு:- அம்மா நீ இவ்வளவுதைரியமாயிருப்பாயென்று நான் நினைக்கவில்லை நீ பரிசுத்த மானவளாயிருந்தால் கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்.

மனோ:— உங்களுக்கு அதைப்பற்றி சந்தேகமும் உண்டோ?

கரு:— நீ சுத்தமானவள் என்பதற்கு எனக்கொரு சந்தேகமுமில்லை.

மனோ:— அதுபோதும் இனி என்னை யார் நிந்தித்தாலும் வருத்தமில்லை, எக்கஷ்டம் வந்தாலும் சகிப்பேன் நீங்கள் மாறுபாடான எண்ணங்கொண்டிருந்தால் மட்டும் நான் உயிர்வாழ்வது வீணும். உங்கள் மனதில் சந்தேகமில்லாதவரையிலும் எனக்கு இது ஒரு கஷ்டமில்லை என்றாள், அச்சமயம் அந்நகரத்து சேனாதிபதியான வீரசேனன் உள்ளே பிரவேசித்தான் அரசனை நோக்கி வந்தனமளித்து சற்று நாழிகை மௌனமாய் நின்றான். அரசனும் தம் பெண்ணிடம் விடைபெற்று தம் மஹாலிற்குச்சென்றார். வீரசேனனும் அரசன் வெளிச்சென்றவுடன் ராஜகுமாரியைப்பார்த்து மிகவருத்தத்துடன் தேவி தங்களுக்கு இக்கஷ்டம் வந்ததை நினைக்க என் மனம் நோகிறது; வம்சபாரம்பரியமாய் இந்நாட்டில் சேனாதிபத்தியம் வகித்துவருபவரின் புத்திரன் யான். இத்தகைய அபவாதம் இந்த வம்சத்தைப்பற்றி கேட்டிலேன். நான் உங்களுக்கு செய்யக்கூடிய உதவி ஒன்றுமில்லையா? அப்படி ஏதேனுமிருந்தால் தெரிவியுங்கள் நான் அது எவ்வளவு கஷ்டமாயிருந்தாலும் செய்து முடிப்பேன். வீரசேனரே! நீங்கள் நமக்கு நேரிட்ட கஷ்டத்தை நினைத்து வருந்துவதைக்கேட்க, நம்மனம் மிகநோகின்றது. நீங்கள் வீணில் வருத்தப்பட்டு என்னபயன். எல்லாம் விதிப்படிதானே முடியும் என்றாள்.

வீர:— அம்மா நீங்கள் சொல்வது உண்மையே ஆயினும் தங்கள்போன்ற குற்றமற்ற மாதர்கள், அநியாயமாய் அவஸ்தைப்பட மனம் ஒவ்வேனென்கிறதே.

மனோ:— அதற்கென்ன செய்யலாம்

வீர:— எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது அதாவது நீங்கள் என் தப்பித்துக்கொண்டு போகக்கூடாது.

மனோ:— ஐயா! அது பெரும் பிழை. நான் இக்குற்றம் சாட்டப்பெற்று தண்டனைக்கு ஒளிவேனாயின் நான் குற்றவாளியென்பது ஸ்தாபிதமாய்விடும், அதுவுமன்றி, என் மானத்தையிழந்த நான் ஜீவனை வைத்திருந்து என்ன பிரயோசனம் பிராணனை இழந்தாவது மானத்தைக் காக்கவேண்டும். ஆகையால் நான் இங்கிருந்து எங்கும் போகமாட்டேன்.

வீர:— அம்மா இப்பொழுது காவலாயிருப்பவன் என் சேவகன். எனக்குள்பட்டவராய் உங்கள் நன்மையைத்தேடுவோரான உத்தியோகஸ்தர்கள் சுமார் நூறு பேர்கள் என் கைக்குள்ளிருக்கிறார்கள். உங்களை எவ்விதத்திலும் காப்பாற்றவேணுமென்று எண்ணங்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் வேண்டுகோளின் மீது இங்கு நான் வந்தேன். அவர்களனைவரும் வாயிலில் தயாராய் காத்திருக்கிறார்கள், உங்கள் சம்மதத்தை எதிர்பார்த்திருக்கிறார்கள்.

மனோ:— சேனாதிபதி தங்களபிமானத்திற்கு நன்றியுடையவராயிருப்போம். நம் நாட்டில் இராஜகுமாரியைக்காப்பாற்ற நீதி தெரிந்தவர்கள் சட்டம்

மீறி நடந்தார்களேனும், அபவாதம் உண்டாயதில் நமக்கிஷ்டமில்லை, ஆகையால் உடனே சென்று உங்கள் சிநேகிதர்களுக்கு நம் எண்ணத்தைத் தெரிவித்து தம் தம் வீடு செல்லும்படி செய்யவும்.

வீர:— அம்மா இது நல்லசமயம். நான் வயதுமுதிர்ந்தவன், என் வார்த்தையைக்கேளுங்கள். இவ்வளவு சிற வயதில் நீங்கள் இறப்பது எனக்கிஷ்டமில்லை நான் உங்களைக்காப்பாற்ற முயலுவது ஜெயசேகரருக்குத்தெரிந்தால் சாவல் மாற்றிவிடுவார். பிறகு கஷ்டமாயிருக்கும் புறப்படுங்கள். நான் உங்களை ஜாக்கிரதையாய் பயமில்லாதவோர் இடத்தில் கொண்டுபோய் சேர்க்கிறேன்.

மனே:— ஐயா உங்கள் பிரீதிக்கு நாம் உங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறோம். இந்நகரி இயுடன் மிக்க துயரமடைந்திருக்கும். நம தந்தையருக்காறுதல் சொல்லி அவர் ஜீவனுக்கபாயம் வராமல் காத்து வாருங்கள். என்னைப்பற்றி கவலைப்படாதீர்கள். எனக்கு இறக்கபயமில்லை. ஆயினுமித்தகைய சட்டங்கள் நாட்டில் வழங்கினால் குற்றமற்றவரநேகர் வீண் துன்பத்திற்காளாவார்கள். இதை மாற்றிவிட பிரயத்தனம் செய்யுங்கள்.

வீர:— ஆனல் என் வேண்டுகோளுக்கிணங்க இஷ்டமில்லையா? சரி; நான் என்ன செய்வது எல்லாம் விதிப்பால் முடியும்."

என்று வீரசேனர் சொல்லிக்கொண்டிருக்கையில் அதிவிரைவாய் ஜெகந்நாதன் உள்ளே நாலு காவலாட்களுடன் பிரவேசித்து அம்மா நீங்கள் இங்கிருக்

கூடாது. வேறு அறைக்குப்போகவேண்டும். ஐயர் வீரமீசனரே! நீங்கள் இப்பொழுது முதல் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறீர்கள். மறு உத்தரவு வரும் வரையில நீங்கள் என்கைதி. காவலாளிகளோ! நீங்கள் இவரைப்பத்திரமாய் பார்த்துக்கொள்ளுங்கள். நான் இம்மாதை ஓர் அறையில் அடைத்துவிட்டு வருகிறேனெ”ன்று அதிகாரம் செய்துவிட்டுப்போனான் ஜெகந்நாதன்.

10-வது அத்தியாயம்.

சபாமண்டபத்திற்கு முன்பு ஓர் மைதானம். வேலையாட்கள் அதிதீவரமாய் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். மைதானத்தில் ஓர் மேடைநியமிக்கப்பட்டு அதன்பேரில் ஒரு மரக்கட்டை நாட்டப்பட்டிருக்கிறது. அது தான் மனோன்மணியைக்கொலை செய்வதற்காக நியமிக்கப்பட்டபலிபீடம். இதனருகிலோர் கயிற்றுடன் ஓர் ஸ்தம்பம் நிறுத்தப்பட்டிருக்கிறது இது துண்டிக்கப்பட்ட முண்டத்தை எல்லோரும் பார்க்கும்படி தொங்கவிடுவதற்காக. சாயந்திரம் 3மணி இருக்கும். இன்னும் ஒருமணி தேசகாலத்தில் ஒருவரும் ஜெயசேகரருடன் போர்செய்ய வராமலிருந்தால் ராஜகுமாரி சிரச்சேதமடைவாள். ஜனங்கள் இக்கோரகாட்சியைக்காண கூட்டம் கூடுகிறார்கள். எல்லா வயதுகளிலுமுள்ள எல்லா ஜாதி ஸ்திரீபுமான்களும் வருகிறார்கள். தூரத்தில் பறையடிச்சத்தம் கேட்கிறது. பெரிதான ஒருகொடி தெரிகிறது. அதைச்சுற்றிலும் கும்பல் கும்பலாய் மனிதர்கள் அலைபுரண்டுவருவது போல் மெல்லென அசைந்து வருகிறார்கள். “ஜெயசேகரா ராஜபுத்திரியான மனோன்மணி சோரம் போன

வனென்று குற்றம் சாற்றுகிறார். யாரேனும் அவர் சாற்றின குற்றம் அநியாயமென்றால் அவர்களுடன் போர்செய்யத் தயாராயிருக்கிறு"ரென்று ஒரு தூதன் அடிக்கடி உரத்துக்கூவுகிறான். வெகு கோலத்துடன் இச்சங்கமானது வருகிறது. இதே சமயத்தில் மைதானத்தின் மற்றொரு புறத்தில் பார்வை கீழ் நோக்கினவளாய் வெளுத்ததோர் ஆடைதரித்து சந்தோஷமற்ற முகத்துடன் நாற்புறங்களிலும் காவலாளிகளால் காக்கப்பட்டு மங்கை மனோன்மணி வருகிறாள். மைதானத்தில் கூடியிருந்த கூட்டத்தில்சிலர் ஜெயசேகரன் புறமும் மற்றவர் மனோன்மணி புறமும் நோக்குகிறார்கள். இது கல்யாண கோலமல்ல; ஒருவர் முகத்திலும் கொஞ்சமேனும் சந்தோஷமில்லை. எப்புறத்திலும் உஸ் உஸ். எனும் பெருமூச்சுக்கேட்டது. சிலர்ஐயோ என்று அலறினார்கள் மாநிநியின் விதியை நினைத்து துக்கிக்காதவர் ஒருவருமில்லை. ஜெயசேகரன் தன் சிநேகிதனும் ஜெகந்நாதனுடன் ஆயுதபாணியாய் நடு மைதானத்தில் நின்று 'ஜெகந்நாதா, நாழிகை ஆய்விட்டது இன்னும் ஒருதரம் நான் யுத்தத்திற்கு தயாராயிருக்கிறேனென்று சொல்லிவிடு' என்றான்.

ஜெக:— ஜெயசேகரர் மனோன்மணியின் மீது விபசாரதோஷம் சாற்றியிருக்கிறார் அது தப்பென்று சொல்வர்யாரேனுமிருந்தால் அவருடன் போர் செய்யத்தயாராருக்கிறார்" என்றான்.

இவ்வார்த்தைகளைச் சொல்லி முடிக்குமுன் ஓர் தாரையின் கம்பீரமான சப்தம் கேட்டது. படபடவென்று ஒரு குதிரையின் சப்தம் கேட்டது. துரகத்தின் காலடிச்சத்தம் கேட்ட நாழிகையில் ஓர் வீரன

குதிரையின்பேரில் அதிவேகமாய் வந்தான். அவன் ஜெயசேகரனிருக்குமிடத்திற்குச் சென்று கூடியிருந்த சங்கத்தை நோக்கி “இங்கு கூடியிருக்கும் கனவான்களே! ஜெயசேகரர், மனோன்மணியெனும், மாதின் மீது சாற்றிய அபவாதம் பொய். அதை ஸ்தாபிக்க இவருடன் போர் செய்ய என் சிநேகிதர் தயாராய்வருகிறார் இன்னும் அரை மணி இருக்கிறது நாலடிக்க ஆகையால் அதோ நிற்கின்ற மாதை ஓர்வித தண்டனைக்கும் ஆளாக்கக்கூடாது” என்றார். உடனே அங்கு கூடியிருந்தவர்களெல்லாம் தங்கள சந்தோஷத்தை ஓர் குரலில்தெரிவித்தார்கள். ஜெயசேகரனின் முகம் கறுத்தது. தானெடுத்த காரியம் முடியாமல் போமோ என்று சந்தேகித்தான். தன் சிநேகிதனைப்பார்த்து

“இதென்ன விபரீதம் நான் எல்லாம் நம்மிஷ்டம் போல் முடிந்ததென்று எண்ணினேனே. யாரோ ஒருவன் என்னுடன் சண்டை செய்யத் தயாராய் வருகிறானே. நான் என்ன செய்வது” என்றான்.

ஜேக:— ஐயா! பயத்தை விட்டு விடுங்கள். தொடங்கின காரியம் ஜெயமாகாவிட்டாலும் உங்கள் மனக்குழப்பத்தை வெளியிடாதீர்கள்.

ஜெய:— அதோ கேட்கிறது குதிரையின் காலடிச்சப்தம் வருபவன் யாரோ தெரியவில்லை. அவன் என்னை வென்றுவிட்டால் மனோன்மணி தப்பித்துக்கொண்டு விடுவாளே. என் பிரயத்தனம் முழுவதும் வீணாய்ப்போய்விடுமே. யாரும் என்னுடன் போர் செய்யமாட்டாரென்றல்லவோ பறையடிக்கிறேன்.

ஜேக:— நீங்கள் ஏன் வீணாகக்குழம்புவது; உரலில் தலையிட்ட பிறகு உலக்கையிடிக்கு அஞ்சினாலாகு

மா? குதிரை சமீபத்தில் வந்து விட்டது தைரியத்துடன் அவனைப்போருக்கழையுங்கள். பிற்பாடு நடப்பது நடக்கட்டு" மென்றான். ஜனங்கள் ஆவலுடன் வரப்போகிற அவ்வீரனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிலர் இவன் யாராயிருக்கலாமென்று எண்ணினார்கள். சிலர் இவன் வெற்றியடையவேணுமே என்று சந்தேகித்தார்கள். பலர் மனோன்மணி சுத்தபத்தவள். ஆகையாலேதான் கடவுள் கடைசி க்ஷணத்தில் உதவவருகிறாரென்று வேதாந்தம் பேசினார்கள். ஜெயசேகரனது முகம் வெளுத்தது. கைகள் நடுங்கின. இவனுடைய கம்பீரம் இவனை விட்டு அகன்றது. பூனையைக்கண்ட எலிபோல் தயங்கினான். போர் வீரனும் அங்கு வந்து சேர்ந்தான்.

"ஜெயசேகரனின் அருகாமையிலிருந்து தைரியமாய் அவனிடம் போர் செய்யுங்கள், பயப்பட வேண்டா" மென்று சொல்லிக்கொண்டிருந்தான்.?

ஜெய:—யார். நீர். எந்த ஊர். இங்கு வந்த காரணம்.

வந்தவன்:—என் பேர் குணசேகரன். இந்நாட்டைச் சேர்ந்த அந்நியநாட்டுப்பிரபு; நீர் அநியாயமாய் ஓர் பெண்ணைக்கொல்ல எத்தனித்தவர் ஓர் மங்கையை கொன்றவர். என்னையும் கொல்ல எத்தனம் செய்தவர். நீர் செய்த இக்குற்றங்களுக்குப் பழிவாங்குவதற்காக மனோன்மணியால் நியமிக்கப்பட்ட வீரனாய் வந்தவன் நான். என்ன சொல்லுகிறீர்.

ஜெய.— நீர் சொல்வதெல்லாம் பொய்.

குண;—நான் சொல்வதா பொய்? இந்தக் கையெழுத்து யாருடையது, சித்திரரேகாவைக்கொல்ல கொடுத்தக்கடிதமல்லவா யிது வுண்டா வில்லா?

வில்:— ஆமாம் சாமி.

குண:— என்னைக் கொல்லப்புதரில் ஒளிந்திருக்கச் சொன்ன பெரிய மனுஷ்யர் இவர்தானா.

வில்:— ஆமாஞ்சாமி

குண:—என்னா சொல்லுகிறீர்! இதற்கெல்லாம் உத்தம வம்சத்தில்பிறந்த உங்களுக்கு இந்நீச புத்தி சுவாமி கொடுத்தாரே, உம்மைக்காத்துக்கொள்ளும்"

என்றுசொல்லி யுத்தத்துக்குத் தொடங்கினான். இருவான்வாட்களும் சாயந்திர வேளையில் பளபளவென்று பிரகாசித்தன. ஜெயசேகரன்வாள்கொண்டகரம்வெட்டுண்டு கத்தி கீழே விழுந்தது. உடனே குணசேகரன் "இனி நீ சாகப்போகிறாய் கடவுளைத்தியானம் செய்துகொள்" என்று சொல்லி ஜெயசேகனின் மார்பில் கத்தியை நாட்டினான். வெட்டுண்ட மரம்போல் சாய்ந்தான் ஜெயசேகரன். மனோன்மணியும் தன் காதலர் இருக்குமிடமோடி "என் மான ரட்சகரே! என்ற வார்த்தைகளுடன் ஆலிங்கனம் செய்துகொண்டாள். தாங்கினான் தன் பிரிய சகியை மார்பின் மீது குணசேகரன். ஆனந்த பாஷ்பம் பெருகினது. இருவரும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. இவர்களின மனதில் உள்ளதை சொல்வதற்குச்சக்தியற்றதாயிருந்தது இவர்களின் நாக்கள். நெருப்புப்பொரி பாவுவதுபோல் மனோன்மணியின் விடுதலை ஊர் முழுதும் பாவினது: துயரமடைந்த கருணாகரரின் செவியில் விழுந்து அவரும் அடங்காச் சந்தோஷத்துடன் ஓர் சிறுவனைப்போல் அதி விரைவாய் வந்தார் தம் மகளைக்காண. தந்தை வருவதைகண்ட உத்தமி அவரிடம் சென்று அவரைக்

கட்டித்தழுவினார். ஐயா என் பெண்ணின் உயிரைக் காப்பாற்றின உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன் என் உறவோனெனும் எண்ணத்துடன் அப்பாதகனை நம்பினேன்.

உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்கவேண்டாம்.
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன் பிறவா
மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும், அம்மருந்து
போல் வாருமுண்டு. என்னும் உண்மையை மறந்தேன். என் பெண்ணின் உயிரைக் காப்பாற்றின உங்களை என்று மறவா வண்ணம் நீரே என் பெண்ணையும் மணம்புரிந்து இந்நாட்டையும் ஆண்டு என் மனம் களிக்கச்செய்வீராக'' என்று சொல்லி தம் பெண்ணினிருகரத்தையும் பிடித்து குணசேகரரிடம் கொடுத்தார். அவர் அதை முத்தமிட்டார்.

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இலவென்றார்—வண்புலவர்
முன்னுரைத்த சொற்பொருள்தேர் மூதறிஞர் கண்டனர் வார்
நன்னிலைமைக் கேற்ற நலம்.

முற்றுப்பெற்றது.

147774

Copies can be had of:-

K. S. Venkataraman,
Stamp Vendor,

N. Kanakarajaier,
Senior Tamil Pandit,
V. M. H. School,

OR

O. C. Peer Mohamed Sahib,
Hakkeem Press,
BODINAYAKANUR.